பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalāikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 29, திங்கட்கிழமை 14.08.2017 கதிர் 281

உங்கள் நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களை குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள

WINSTAR JOB BANK

106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

web: www.winstar jaffna.com

Fb : winstar job bank

021 320 2789



## குழம்பிப் போயிருக்கும் சுரேஷ் மக்களையும் குழப்புகின்றார்!

### மாவை காட்டமான பதிலடி அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக.14

"சுரேஷ் ரெம்பவே குழம்பிப் போயிருக்கின்றார் என்பதும் அதனால் மக்களையும் குழப்புகின்றார் என்பதும் வெளிப்படை. அண்மைக் காலத்தில் தமிழரசுக் கட்சிக்கும், அதன் தலைமைக்கும் எதிராகத்தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டுவதையே தொழிலாக அவர் கொண்டிருக்கின்றமையை நாம் குழம்பாமல் அவதானித்து வருகின்றோம். மக்களும் குழப்பமின்றி அவதானித்து வருகின்றனர்."

–இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ்

பக்கம் 03



# சம்பந்தனுடன் கைகோக்க மஹிந்த தரப்பு ஆர்வம்!



## நாமல் ஊடாக சமிக்ஞை

கொழும்பு, ஓகஸ்ட் 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் அதன் தலைவர் இரா.சம்பந்தனுடனும் நெருங்கிய அரசியல் தொடர்பாடல்களை மேற்கொள்வதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகிறார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

அதன் ஒரு வெளிப்பாடாக சம்பந்தனின் கருத்தை வரவேற்கும் டுவிட்டர் செய்தி ஒன்று மஹிந்த ராஜபக்ஷவின் மகனான நாமல் எம்.பியினால் தமிழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 18

## மேரிலாண்ட் ஆளுநருக்கான தேர்தலில் குதிக்கிறார் இலங்கை வம்சாவளி யுவதி



திருமதி ஒபாமாவுடன் கிறிஸ் விக்னராஜா

அனாபொலிஸ்,ஓக.14

ஒபாமா நிர்வாகத்தில் மிச்செல் ஒபாமாவின் உதவியாளராகப்பணியாற்றிய – இலங்கையில் பிறந்தவரான – கிறிஸ் விக்னராஜா (வயது – 37) அமெரிக்காவின் மேரிலாண்ட்

பக்கம் 18

## ராஜபக்ஷக்களுக்கு எதிராக இவ்வாரம் கடும் நடவடிக்கை

### சூட்சுமமாகக் கோடி காட்டினார் ஜனாதிபதி

கொழும்பு, ஓக.14

ராஜபக்ஷக்களுக்கு எதிராக இவ்வாரத்தில் கடும் சட்ட நட வடிக்கை பாயும் சாத்தியம் இருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தகவலை கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் கட்சியின் தலைவரும் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன சூட்சுமமாகக் கோடி காட்டினார் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வெளிவிவகார அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவைப் பதவி விலகச்செய்தமை தமக்கு மிகப் பெரிய அரசியல் வெற்றி என கூட்டு எதிரணியினர்

பக்கம் 18

## எல்லாச் சம்பவங்களுக்கும் புலி முத்திரை குத்தாதீர்கள்!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, ஓக.14

வடக்கில் இடம்பெற்று வரும் எல்லாச் சம்பவங்களுக்கும் புலி முத்திரை குத்தக் கூடாது என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

பக்கம் 18

## அரசு, ஜனாதிபதி, பிரதமரை பாதுகாக்கவே ரவி ராஜினாமா

### இப்படி விளக்குகின்றார் அவர்



கொழும்பு, ஓக.14

ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தைப் பாதுகாக்கவே அமைச்சுப் பதவியைத் தாம் இராஜினாமாச் செய்தார் என மோசடிக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி

பக்கம் 18

## தாமாக டெனீஸ்வரன் பதவி விலகமாட்டார்!

### இன்று செய்தியாளர் மாநாட்டில் அறிவிப்பார்



மன்னார், ஓக.14

வடக்கு மாகாண சபையின் கடற்றொழில், மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன், அவரது ரெலோக் கட்சியின் தலைமைக் குழு கொடுத்த அழுத்தத்துக்கு இணங்கி, இன்று தமது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்வார் என்று ரெலோ உயர் வட்டாரங்கள் நேற்றிரவு வரை நம்பிக்கை

பக்கம் 18

## பாவத்துக்குப் பரிகாரம் தேடுவதற்கு அரசிலிருந்து உடனே விலகுங்கள்!

### சு.கவின் அமைச்சர்களுக்கு மஹிந்த அழைப்பு

கொழும்பு, ஓக.14

"செய்த பாவங்களிலிருந்து மீளவேண்டுமாயின் தற்பொழுது அரசாங்கத்தில்வகிக்கும் பதவிகளைக் கைவிட்டுவிட்டு கூட்டு எதிரணியுடன் இணைந்து கொள்ளுங்கள்."

–இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களுக்கு அழைப்புவிடுக்கிறார்

பக்கம் 18

## இனியும் சிறந்ததோர் அமைச்சரவையை முதலமைச்சரால் அமைக்க முடியுமா?

### எம்.பி. சிறிதரன் கேள்வி




வவுனியா, ஓக. 14

சிறந்ததொரு அமைச்சர் வாரியத்தை வடக்கு முதலமைச்சரால் இனி அமைக்க முடியுமா என்பதே தற் போதைய சந்தேகம் என யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியா கனகராயன் குளம்

பக்கம் 18


அளப்பு அருணாசலம்



கை கோக்கவோ...?
இல்லாவிட்டால்
கால் வாரவோ....?

# கேப்பாபிலவு மக்களின் காணி உரிமையை அரசு இனிமேலும் மறுத்தால் புரிந்துணர்வுக்குப் பாதிப்பு!

## சம்பந்தன் எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 14

''கேப்பாபிலவு மக்கள் தங்களது காணிகளுக்குத் திரும்பிச் செல்லும் உரிமையை இனி மேலும் மறுக்க முடியாது. அப்படி மறுப்பது அநீதி மாத்திரமல்ல, அது நற்செயலுக்கும் புரிந்துணர்வுக்கும் பாதகமான செயற்பாடாகவும் அமையும்''.

-இவ்வாறு எச்சரித்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் கபில வைத்தியரத்தனவுக்கு நேற்றுத் தாம் அனுப்பி வைத்த பதில் கடிதம் ஒன்றிலேயே இந்த விடயத்தை அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, புனர்வாழ்வு அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, முப்படைகளின் கூட்டுத் தளபதி ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு.-

முல்லைத்தீவு மாவட்டம், கேப்பாபிலவிலுள்ள இடம் பெயர்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகள் குறித்த விடயம் தொடர்பில் தங்களது 9 ஆம் திகதிய கடிதம் நேற்று எனக்குக் கிடைத்தது. தங்கள் பதிலுக்கு எனது நன் றிகள்.

இந்த விடயம் பல்வேறு மட்டங்களில் அவதானத்திற்கு உள்ளாகி வந்துள்ளது. இறுதியாக புனர்வாழ்வு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் தலைமையில், புனர்வாழ்வு அமைச்சில் ஜூலை, 26, 2017 அன்று ஒரு கூட்டம் இடம்பெற்றிருந்தது.

ஜூலை, 20, 2017 அன்று நான் தங்களுக்கும் ஏனையோருக்கும் ஒரு பிரதியுடன் ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் அனைத்தையும் உறுதி செய்கிறேன். எனது அந்தக் கடிதத்திற்கு ஜனாதிபதியின் செயலாளர் 2017 ஜூலை 28 ஆம் திகதி பதிலளித்திருந்தார்.

புனர்வாழ்வு அமைச்சில் ஜூலை 26ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் 111 ஏக்கர் காணியை விடுவிப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதுடன், குறித்த இடத்திலிருந்து இராணுவம் வெளியேறுவதற்குத் தேவையான நிதியைத் தான் ஒரு சில நாளகளில் ஒதுக்கித் தருவார் என அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இந்தத் தீர்மானத்திற்கு அமைய வெளியேறும் நடவடிக்கை தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். தீர்வு எட்டப்பட வேண்டிய விடயமாக இருப்பது 70 ஏக்கர் 2ரூட் காணி விடயமே. தங்களது 09.08.2017 அன்று திகதியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 73.11 ஏக்கர் காணியே இது என்பது எனது கணிப்பாகும். இந்தக் காணி தொடர்பில் ஜூலை 20, 2017 அன்று ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்த விடயங்களை உறுதி செய்கிறேன்.

ஜனாதிபதியின் செயலாளரினால் ஜூலை 28ஆம் திகதி அனுப்பப்பட்டிருந்த கடிதத்தில் இந்த நிலைப்பாடு தொடர்பில் உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பின்னணியில், வெளியேறுவது தொடர்பில் தீர்க்கப்படாமல் இருக்கும் ஒரே விடயம் இந்த 70 ஏக்கர் 2 ரூட் /73.11ஏக்கர் காணிப் பகுதியேயாகும்.

இந்த மக்கள் சொந்தக் காணிகளில் இருந்து வெளியேற்றப்பட்டு ஒரு தசாப்த காலம் கடந்து விட்டது. ஆயுதப் போராட்டம் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்து விட்டன. இந்த மக்கள் தமது காணிகளில் மீளக் குடியேறுவதை வலியுறுத்தி கடந்த 165 நாள்களாக இந்தக் காணிகளின் வாயிலின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தப் போராட்டமானது மழையிலும் வெயிலிலுமாக மிகுந்த அவஸ் தைகளோடு இடம் பெற்று வருகின்றது.

மக்களின் அனுமதியின்றி இந்தக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. மேலும் அவர்களின் இடைவிடாத போராட்டங்களின் மத்தியிலும் சட்ட ரீதியாகப் பெறப்படாத இந்தக் காணிகளில் இராணுவம் தொடர்ந்தும் குடிகொண்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது நிச்சயமாக சட்ட ஒழுங்குக் கட்டமைப்பை மீறும் செயலாகும்.

மேலும், இராணுவத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய போதியளவு அரசகாணி அந்த இடத்திலேகாணப்படுகின்றது. குறித்த 111 ஏக்கர் மற்றும் 70 ஏக்கர் 2ரூட்/73.11ஏக்கர் காணிகள் பெரும்பாலும் மக்களுக்கு உரித்தான, அவர்கள் வாழ்வதற்கும் ஏனைய சமூக, பொருளாதார தேவைகளுக்குமாகப் பரம்பரை பரம்பரையாக நூற்றாண்டு காலமாகப் பயன்படுத்தி வந்த காணிகளாகும். தாங்கள் பிறந்து வளர்ந்த மண் தொடர்பில் அவர்களுக்கு உரித்து உண்டு.

இந்த மக்களுக்கு அவர்களது இடங்களுக்குத்திரும்பிச் செல்லும் உரிமையை இனி மேலும் மறுக்க முடியாது. அப்படிச் செய்வது அநீதி மாத்திரமல்ல, அது நற்செயலுக்கும், புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும் பாதகமான செயற்பாடாக அமையும்.

குறித்த 111 ஏக்கர் மற்றும் 70ஏக்கர் 2ரூட்/73.11 ஏக்கர் காணிகள் எவ்வித தாமதமும் இன்றி விடுவிக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட வேண்டும் என நான் மிகவும் ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறேன்.

இந்த விடயம் தங்களது மிக விரைவான கவனத்திற்குட்படுத்துவதை நான் வரவேற்கிறேன்.- என்று உள்ளது. (உ)

## மஹிந்த உள்ளிட்ட 22 சு.க. உறுப்பினர்கள் கட்சி தாவுவதற்குத் தயாராகின்றனராம்!

கொழும்பு, ஓக.14

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இணையத் தீர்மானித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கூறியுள்ளார் என ஆங்கில ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அவர்கள் அடுத்த மாதம் தமது கட்சியின் உறுப்புரிமையை பெற்றுக்கொள்வார்கள் என்றும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அதில் உள்ளடங்குவார் என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் உத்தியோகபூர்வமற்ற பேச்சுகள் தற்போது இடம் பெற்று வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடாக நாடாளுமன்ற



உறுப்புரிமையைப் பெற்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் புதிய கட்சியின் உறுப்புரிமையைப்பெற்றுக்கொண்டால், அவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் கேள்வி எழக்கூடும்.

எனவே, அவர்களின் நாடாளுமன்ற உறுப்புரிமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணி மேற்கொள்ளும் என்றும் அதன் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில்அடுத்த தேர்தலில் களமிறங்க எதிர்பார்க்கின்றது என்றும் பீரிஸ் கூறியுள்ளார்.

அரசை கவிழ்ப்பது புதிய கட்சியின் எண்ணம் இல்லை என்றும்,அதைப்பலவீனப்படுத்துவதே எமது எண்ணம் என்றும் பீரிஸ்மேலும்தெரிவித்துள்ளார்.

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஓக.14

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது.

நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.(ச)

இன்றைய தலைப்பு: 'புலன்களின் கட்டுப்பாடு'

## நல்லூரில் இன்று நாடகத் திருவிழாவில் இரு நாடகங்கள்

நல்லூர் பெரும் திருவிழாக் காலத்தில் செயல்திறன் அரங்க இயக்கம் நடத்தும் 'நாடகத்திருவிழா' எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தொடர்ந்து நடைபெறும்.

இந்த நாடகத் திருவிழா நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள பண்டாரக்குளத்தின் முன்பாகவுள்ள பஞ்சபூத அரங்கிலே நடைபெறும். இதில் தே.தேவானந்தின் 'ஒரு மோட்டார் சைக்கிளும் ஒன்பது பேரும்' (சிறுவர் நாடகம்) இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிமுதல் 8 மணி வரையும், குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'பஞ்சவர்ண நரியார்' (சிறுவர் நாடகம்), இரவு 8.15 மணி முதல் 9 மணி வரையும் இடம்பெறவுள்ளன. (ச)

## இலங்கையில் மின்சார ரயில்!

இலங்கையில் மின்சார ரயில் சேவையை அறிமுகப் படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

பாணந்துறை, பொல்ஹவலை, கோட்டை, நீர்கொழும்பு, களனிவெளி பகுதிகளை உள்ளடக்கியதாக 158 கிலோ மீற்றர்களைக் கொண்ட ரயில்ப் பாதைகளில் இந்த மின்சார ரயில் சேவைகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. தற்போது இதற்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க ஆறு நாடுகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன எனப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.




யாழ்ப்பாணம், ஓக.14

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: மதுராங்கி சிறிதரன், வயலின்: கா.குகபரன், மிருதங்கம்:க.கஜன், கெஞ்சிரா: நா.சிவசுந்தர சர்மா, கடம்:கே.ரவிசங்கர்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவப்புலவர் சைவநெறி சன்மார்க்கர் கா.கமலநாதன் 'திருமுறையும் வாழ்வும்' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (ச)

## குழம்பிப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமச்சந்திரன் குறித்துக்காட்டமாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக்கட்சியின்தலைவரும் யாழ்.மாவட்டநாடாளுமன்றஉறுப்பினருமானமாவைசேனாதிராசா.

"குழப்புகிறது தமிழரசுக் கட்சி; சுரேஷ்காட்டமாகக் குற்றச்சாட்டு"–என்றதலைப்பில்சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தவை என வெளிவந்த செய்தி தொடர்பாகவே இவ்வாறு காட்டத்துடன் பதிலடி அறிக்கை வெளியிட்டிருக்கின்றார் மாவை சேனாதிராசா எம்.பி.

அதில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:

"குழப்புகிறது தமிழரசுக்கட்சி சுரேஷ்காட்டமாகக்குற்றச்சாட்டு" – இணையத் தளங்களில், பத்திரிகைகளில் தமிழரசுக் கட்சியையும், என்னையும்(மாவைசேனாதிராசா)குறி வைத்துத் தாக்கும் செய்தி தலைப்புத் தான் இது.

இதற்கு முன்னர் இரா.சம்பந்தன் அவர்களையும், சுமந்திரன் அவர்களையும் திட்டித் தீர்த்து வந்த சுரேஷ் பிறேமச்சந்திரன் இப்பொழுது என்னையும் திட்ட ஆரம்பித்திருக்கிறார். அது ஜனநாயகம்.

### மண்டை பிளந்து விடும்

பத்திரிகைகளில், இணையத் தளங்களில் சுரேஷின் செய்தி வெளிவராதுவிட்டால்அவருக்கு மண்டைபிளந்துவிடும்போலும். அச் செய்திகள் உண்மைக்கு மாறானதாயினும் அவருக்கு மகிழ்ச்சிதான். இது அவர் சுபாவம்.

2013 மாகாணசபைத் தேர்தலின்போது என்னை எல்லோரும் ஒரு மனதாக முதலமைச்சர் வேட்பாளராகப் பிரேரித்து நின்றமைக்காக இன்றும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்விடயத்தில் 09.08.2017 அன்றும் எதிர்க் கட்சி முதல்வர் நாடாளுமன்றக் கட்டடத்தில் நடைபெற்ற நமது கூட்டத்திலும் "சேனாதிராசா தான் முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதாகச் சொல்லியிருந்தால் அப்படியே அவர்தான் எமது வேட்பாளர் ஆக இருந்திருப்பார்" – எனக் கூறினார். அது தான் உண்மை. நீதியரசர் விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதில் நான் எவ்வளவு அர்ப்பணத்துடன்நடந்தேன்என்பதையாவரும் அறிவர். அதைப் பற்றியதல்ல இப்போது பேச வேண்டிய விடயம். குழம்பிப்போயிருக்கும் சுரேஷ் பிறேமச்சந்திரன் மக்களைக் குழப்பும் அறிக்கைகளையே வெளியிட்டாலும், பொய்யுரைத்தாலும் நாம் குழப்பமடையாமல் அவரைக் குழப்பாமல் செயலாற்றி வருகிறோம் என்பதுதான் உண்மை.

2013 மாகாண சபைத் தேர்தலில் ஐந்து கட்சிகளும் முதலமைச்சர் வேட்பாளருக்கு ஒரு வாக்கை மக்கள் அளிப்பதற்கு வேலைசெய்ய வேண்டும் எனத் தீர்மானித்தோம். அவ்வாறே தீவிரமாகச் செயலாற்றினோம். அப்பொழுது சுரேஷ் எவ்வாறு நடந்து கொண்டார் என்பதை மறந்துவிடக் கூடும்.

### முதலமைச்சர் தமிழரசா?

வடக்கு மாகாண சபை முதலமைச்சர் அவர்கள் சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் த.தே.கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள் என்று மக்களிடம் கோராமல் எதிரணிக்குச் சாதகமாகச் செயற்பட்டபொழுதும் நாம் பெரு வெற்றி பெற்றோம். அச் சந்தர்ப்பத்திலும் நாம் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கைக்கும் செல்லவில்லை. முதலமைச்சரைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடுகிறீர்கள். அவ்வாறிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்போம்.

தற்போதையபிரச்சினைக்கு வருவோம். மாகாண சபையில் முதலமைச்சர் ஐங்கரநேசனை அமைச்சராக எடுத்தபொழுது ஐங்கரநேசனை தமது கட்சியிலிருந்து நீக்கி விட்டதாகக் கடிதம் தந்திருந்தவர் சுரேஷ். வடக்கு மாகாண சபையில் ஐங்கரநேசன் அமைச்சருக்கு எதிராக ஊழல் குற்ற விசாரணை நடத்த வேண்டுமென்று பிரேரணை கொண்டு வர வேண்டுமென்றவர் 'புளொட்' அமைப்பின் லிங்கநாதன் அவர்களே. பின் அனைத்து ஊழலுக்கு எதிராகவும் சட்டபூர்வமான சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டுமென்றுதமிழரசுக்கட்சி உறுப்பினர் திரு. பரஞ்சோதி தான் பிரேரணை கொண்டு வந்தார். அது இப்பொழுதும் இருக்கிறது. ஆனால் தமிழரசுக் கட்சி ஊழலை ஆதரிக்கிறது என்று பொய்ப்பிரசாரம்செய்யப்பட்டது.

### முதல்வரின் செயற்பாடு பிரச்சினையின் ஆரம்பம்

இருந்தும் நீண்ட காலத்தின் பின்பும்சட்டபூர்வமானஒருவிசாரணைக் குழுவை நியமிக்காமல், ஒரு மூவர் கொண்ட ஒரு விசாரணைக் குழுவை நியமித்து தனக்கு ஆலோசனை சொல்லுமாறு முதலமைச்சர் கேட்டிருந்தார். அவர்கள் கொடுத்த அறிக்கையின்படி முதலமைச்சர் நடவடிக்கைஎடுக்கவில்லை. காலம் தாழ்த்தி வந்தார். நெருக்கடி வந்த பின் அந்த அறிக்கையை சபையில் வைத்து பிரபலமாக்கினார். அது தான் பிரச்சினையின் ஆரம்பம்.

அந்தக் குழுவின் பரிந்துரையின்படி மாகாணசபையில் இரு அமைச்சர்களையும் திருவாளர்கள் ஐங்கரநேசன் மற்றும் குருகுலராசாவை தியாகம் செய்யுமாறு அறிவித்தார். ஏனைய இரு அமைச்சர்களும் அந்த அறிக்கையில் குற்றமற்றவர்களாக இருந்தனர். அவ் விசாரணைக் குழுவினர் அமைச்சர் டாக்டர்சத்தியலிங்கத்தின்சிறந்த சேவைகளைப் பாராட்டியிருந்தார்கள். திரு.டெனீஸ்வரனும், டாக்டர் சத்தியலிங்கமும் எந்தக் குற்றமுமற்றவர்கள் என்பதை முதலமைச்சர் அவ்விசாரணைக் குழு பரிந்துரையை ஏற்றுக் கொள்ளாமல் அவர்களை மீண்டும் விசாரிக்க வேண்டும், ஒரு மாதம் விடுப்பில் இருக்குமாறு பணித்தார். இதுவும் சட்ட அதிகாரமற்றதாகும்.13.07.2017 இதனை சம்பந்தனும் முதலமைச்சரிடம்கூறி இத்தகைய நடவடிக்கை ஏற்புடையது அல்ல என்றுதெரிவித்தார். அப்பொழுது 13.07.2017 காலை, முதலமைச்சர் நான் ஒரு தீர்மானத்தையும் இன்னும் எடுக்கவில்லை, 14.07.2017 அன்று மாகாண சபையில் மாகாண உறுப்பினர் கருத்துக்களை அறிந்த பின் அமைச்சர்கள் தொடர்பில் நாம் தீர்மானிப்போம்' – என்றவர், அன்று மாலை 7.30 அளவில் (மாவை சேனாதிராசா) என்னிடமும் அதே கருத்தை வாக்குறுதியாகச் சொன்னதற்கு மாறாக 14.07.2017 காலையிலேயே உறுப்பினர் கருத்துக்களைக் கேளாமலே எமக்குத் தந்த வாக்குறுதியை மீறி தனது நடவடிக்கையைசபையில்அறிவித்தார். இது தான் உறுப்பினர்கள் நம்பிக்கை இழந்தமைக்கான உடனடிக் காரணமாகும் என்று முதலமைச்சரிடம் இரண்டு சந்திப்புக்களிலும் கூறியிருக்கிறேன். 05.08.2017 முதலமைச்சர்வதிவிடத்தில் சம்பந்தன் அவர்கள் முன்னிலையிலும் கூறியிருக்கிறேன். முதலமைச்சர்அதற்குத் தந்த பதில் ஆச்சரியமாக இருந்தது. அதனை விவாதமாக்க நினைக்கவில்லை.

### காணப்பட்ட இணக்கம்

05.08.2017 முதலமைச்சர் வதிவிடத்தில் நடைபெற்ற சந்திப்பில் இத்தகைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் ஒரு இணக்கத்தை நாம் ஏற்றுக் கொண்டோம். அந்தக் கலந்துரையாடலில் நீங்கள் (சுரேஷ்பிறேமச்சந்திரன்) டாக்டர். சத்தியலிங்கத்தையும், அவரது மனைவி, குடும்பத்தினரையும் வலிந்து இழுத்து அவர்கள் செய்த ஊழல்களுக்கு ஆதாரங்கள்உண்டுஎனவாதிட்டுக்கொண்டிருந்தார். சமரச இணக்கம் கண்டு தீர்வொன்றைக் காணுவதற்குவந்த அந்தக்கூட்டத்தில் பங்குபற்றியிராத டாக்டர் சத்தியலிங்கம் பற்றியும் உண்மைக்கு மாறாகஅவர் குடும்பத்தையும் குற்றஞ்சாட்டியமை முறையற்றசெயலாகும். அதை பார்த்து நின்ற முதலமைச்சர் சுரேஷை தொடர்ந்து பேச அனுமதித்துக் கொண்டிருந்தமை தான்மீண்டும்பிரச்சினைக்கும், நம்பிக்கையீனத்திற்கும் காரணமாகின.

அதற்கும் மேலாக அமைச்சர்கள்நியமனத்தில்தீர்மானித்த வாறில்லாமல் தமிழரசு உறுப்பினர் ஆனல்ட் மற்றும் ஐவரை நியமிக்க முடியாது என்றும் முதலமைச்சர் திட்டவட்டமாகக் கூறினார். நாம் யாரையும் அமைச்சராக நியமிக்க உச்சரிக்கவேயில்லை. திருமதி அனந்தியை அமைச்சராகத் தமிழரசுக் கட்சி சார்பில் நியமித்ததாகக் கூறினார். அப்பொழுதும் அவரை நீக்கும்படி நாம் கோரவில்லை. அவர் மீது இருந்த ஒழுங்கு நடவடிக்கை பற்றியே கூறியிருந்தேன். 'அவரை தமிழரசுக் கட்சியிலிருந்து நீக்கியதாகக் கடிதம் தாருங்கள்' என்று முதல்வர் கேட்டுப் புதிய ஒரு அரசியல் பிரச்சினையை உருவாக்கினார். நான் அது தேவையற்றது என்று கூறினேன்.

### முதல்வரின் எண்ணத்தை தெரிந்து கொண்டோம்

அடுத்து முதலமைச்சர் ஒரு பதவியை 'புளொட்'டிற்கும், மற்றொன்றை ரெலோவுக்கும் வழங்குவேன் என்றார். அது பற்றி எமக்கு பிரச்சினையில்லை. அப்படியானால் குருகுலராசா, டாக்டர் சத்தியலிங்கம் ஆகிய இருவரினதும் இடங்களுக்கு தமிழரசுக் கட்சி சார்பில் யாரையும் நியமிக்க இடமில்லை என்றாகியிருந்தது.

மாகாணசபையில்தமிழரசுக் கட்சி என்று பார்த்தால் 15 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் தான் முதலமைச்சரின் மனப்பாங்கையும், எண்ணத்தையும் தெரிந்து கொண்டோம். அந்த நேரத்தில் மேற் கொண்டு விவாதம் நாம் நடத்தவில்லை.

இனத்தின் ஒற்றுமையின் பேரால் அமைச்சுப்பதவி களுக்குப்போட்டியிடாமல்முதலமைச்சர் விரும்பியவாறு சுமூகமாக, வினைத்திறனுடன் அமைச்சரவையைஅமைக்கவும், மாகாண சபையை நெருக்கடியின்றி நிர்வகிக்கவும், இனப்பிரச்சினை மற்றும் ஏனைய பிரச்சினைகளின் தீர்வுக்காக அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவும் மாகாணசபைஉறுப்பினர்உறுதிபடத் தெரிவித்து ஒரு கருத்தை முன் வைத்திருக்கிறார்கள் தமிழரசு மாகாண சபை உறுப்பினர்கள். அவர்கள் கருத்தை மறுக்க எமக்கு நியாயமிருக்கவில்லை. அமைச்சுப்பொறுப்பை ஏற்பதென்பது மேலும் முரண்பாடுகளுக்கு இடமளித்து விடக் கூடாது. சர்வதேசத்தின் முன்னால், இலங்கை அரசுக்கு முன்னால், நாம் பிளவின்றி ஒற்றுமையாக செயற்பட வேண்டிய பொறுப்பை, கடமையை மக்களிடம் நம்பகத் தன்மையை கட்டியெழுப்பும்நோக்கில், நாம்தமிழரசுக்கட்சியின் உறுப்பினர்களிடம் முக்கிய ஒரு எண்ணத்தை முன்வைத்திருந்தோம். ஆனாலும் எங்கு கல்லெறிபட்டாலும் பின் காலைத் தூக்கும் பிராணியாகத் தமிழரசுக் கட்சி யையே வலிந்து குற்றம்சாட்டி வருகிறார்கள். இது அவர்களின் பழக்க சுபாவம்.

### சுரேஷின் கலகம்

வடக்கு மாகாண அமைச்சரவையில் மந்திரிப் பதவிக்கு போட்டியிட்டு அடிபடாமல், முதலமைச்சர் விருப்பத்தின் படி அமைச்சர்கள் நியமிப்பதற்கு வழிவிட்டிருக்கிறார்கள் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் என்பதை சுரேஷ் ஜீரணிக்க மறுத்து கலகத்தை ஏற்படுத்தவே செயற்படுகிறார்.

சுரேஷ் ரொம்பவே குழம்பிப் போயிருக்கிறார் என்பதும் அதனாலேமக்களையும்குழப்புகிறார் என்பதும் வெளிப்படை. அண்மைக்காலத்தில்தமிழரசுக் கட்சிக்கும், அதன் தலைமைக்கும் எதிராகக் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டுவதேதொழிலாகக் கொண்டிருப்பதை நாம் குழப்பாமல் அவதானித்து வருகின்றோம். மக்களும் குழப்பமின்றியும்அவதானித்துவருகின்றனர். கூட்டமைப்புத் தலைமையை, அகற்றவேண்டுமென்று முயற்சித்து அந்தத் தலைமையை தலைமைப் பொறுப்பை முதலமைச்சரைஏற்குமாறுதொடர்ந்து பேசினார். அறிக்கை விடுகின்றார்.எழுகதமிழ்நிகழ்வுகளிலேயே உரத்து வலிந்து பேசினார். முதலமைச்சர் அதில் எடுபட்டதாகத் தெரியவில்லை. சுரேஷுக்கு அது எரிச்சலாக இருக்கிறது.

சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தைக் குறிவைத்து உண்மைக்கு மாறாக வலிந்து ஊழல் குற்றஞ்சாட்டி குற்றவாளியாக்கவும், அரசியலிலிருந்து வெளியேற்றிவிடவும் சுரேஷ் பிறேமச்சந்திரன் 05.08.2017 அன்றும் கூட்டமைப்புக் கட்சிகளின் ஏனைய தலைவர்களின் முன்னிலையில் தேவையற்ற விதத்தில்முயற்சித்தார். இச்செயல்மிகவும் முறையற்றது. சுரேஷ் பிறேமச்சந்திரனும் அவர் அணியினரும் வன்னிப் பிரதேசத்திலிருந்து டாக்டர் சத்தியலிங்கத்தை அகற்றி விட்டு அரசியல் ஆதாயம் பெற முயற்சிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. டாக்டர் சத்தியலிங்கத்தைகுறிவைத்துஅநியாயமாக குற்றவாளியாக்கி வெளியேற்றத்துடிப்பவர்களிடம் அவரைப் பலிகொடுத்து, இன்னொரு அமைச்சர் பதவிக்காகத் தமிழரசுக் கட்சி அடிபணிந்து விடாது என்பதையும் கூறிக் கொள்கின்றோம். அரசியல் ஆதாய நடவடிக்கைகளும், பழிவாங்கும் செயற்பாடுகளுமே டாக்டர் சத்தியலிங்கத்தின் பதவி விலகலுக்குத் தூண்டிய ஏதுவாகும்.

### உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்

அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் பதவிகளிலிருந்து விலகினாலும், நீக்கப்பட்டாலும் சட்டபூர்வமான, நீதி சுதந்திரமான செயலணியினால் துறைசார், நிர்வாக விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட்டு குற்றத்திற்குள்ளானோர் பொருத்தமான தண்டனைக்கு ஆளாக்கப்படுவதை மாகாண சபை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

டாக்டர் சத்தியலிங்கம் வடக்கு மாகாண சபை அமைச்சரவையில் நல்ல நிர்வாகியாகவும், சுகாதாரத் துறையிலும் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அளப்பரிய சேவையை அர்ப்பணித்துச் செயலாற்றியவர். உதாரணமாக அப் பணிகளில்ஒன்றுதான் நெதர்லாந்துடன் செய்யப்பட்ட சுகாதாரத் துறைக்கான ஒப்பந்தத்தின் மூலம் 140605 மில்லியனைப் பெற்றுக்கொண்டதாகும். அடுத்து சென்ற வாரத்தில் ஜப்பானிலிருந்து 70 பில்லியன் டொலர்களில் மிகக் கணிசமான நிதி வடக்கு மாகாண சுகாதாரத் திட்

பக்கம் 18 >>>





நல்லூர் கொடியேற்றஞ் சப்பரம் தேர் தீர்த்தம்
எல்லாமே இந்துமத ஆன்மீகம் – சொல்வதுதான்
காட்சிகளைக் கண்டு கருத்திற் பதித்தாலே
மீட்சி வருமினி மேல்.

- வேலணையூர் (அமரர்) சி.இராசரத்தினம்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இருபதாவது திருத்தம் 'அவுட்'!

**வரவிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் அரசின் எத்தனம் பிசுபிசுத்துப் போய்விட்டது எனத் தெரிகின்றது.**

**தற்போதைய சப்ரகமுவ மாகாணசபையின் பதவிக்காலம் செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதியும், கிழக்கு மாகாணசபையின் பதவிக்காலம் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதியும், வட மத்திய மாகாண சபையின் பதவிக்காலம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியும் முடிவடைகின்றன.**

**இப்போதைய நிலைமையின்படி, இந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலுக்குரிய வேட்புமனுக்கள் ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளும் தனது திட்டத்தை தேர்தல் ஆணையம் முன்னெடுக்கும் எனத் தெரிகின்றது. பெரும்பாலும் இந்த மூன்று சபைகளுக்குமான தேர்தல்கள் நவம்பரில் நடைபெறும் சாத்தியங்கள் தென்படுகின்றன.**

**அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களையும் ஒரே சமயத்தில் நடத்துவது -**

**நாடாளுமன்ற மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள், விகிதாசார மற்றும் தொகுதி வாரி என இரண்டு முறைமைகளையும் சேர்ந்த கலப்புத் தேர்தல் முறையின் கீழ் இனி வரும் காலங்களில் நடத்தப்படவிருப்பதால், அவற்றைப் போல மாகாணசபைத் தேர்தகளையும் கலப்பு முறையில் நடத்தக் கூடியதாகத் தேர்தல் சட்டங்களை மாற்றுதல் -**

**ஆகிய இரண்டு அடிப்படைகளைக் காட்டி இந்த மூன்று மாகாண சபைத் தேர்தல்களையும் தள்ளிப்போட அரசு மட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டிருந்தது.**

**அதற்கு வசதி செய்யும் விதத்தில் அரசமைப்புக்கு இருபதாவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கும், நடக்கவிருக்கும் மூன்று மாகாணசபைத் தேர்தல்களையும் தள்ளிப்போடுவதற்கும் இரண்டு வாரங்களுக்கு முன்னரே அமைச்சரவை அனுமதியைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பெற்றிருந்தார்.**

**ஆனாலும், அத்திட்டத்தை அவர் தொடர்ந்து முன்னெடுக்க முடியாத இக்கட்டு - நெருக்கடி - முட்டுக்கட்டை - அதற்குள் வந்துவிட்டது.**

**நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கடந்த வியாழனன்று கூடி, எக்காரணம் கொண்டும் வரவிருக்கும் மாகாணசபை தேர்தல்களை ஒத்திவைக்கக் கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றது.**

**போதாகுறைக்கு மாகாண சபைத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் திட்டத்தை மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியும் எதிர்க்கின்றது.**

**அது மட்டுமல்லாமல், மாகாணசபைத் தேர்தல்களைத் தள்ளிப் போடும் திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பை அரசியல் ரீதியாகக் காப்பாற்றும் எத்தனமேயன்றி வேறில்லை, அதைச் செய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஏன் துடியாய்த் துடிக்க வேண்டும் என ரணிலின் ஐ.தே.கட்சி எம்.பிமாரே சீறுகின்றனர் என்றும் தகவல்.**

***'வடக்கு மாகாண சபையைத் தவிர எஞ்சியவை எல்லாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கைகளில்தான் உள்ளன. அவற்றின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டால் அந்த முன்னணித் தரப்புக்குத்தான் லாபம். அத்தோடு இந்தக் கட்டத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் மைத்திரி - மஹிந்த அணிகள் எனப் பிரிந்து நிற்கும் சு.கவுக்குத்தான் பின்னடைவு வரும். ஐ.தே.கட்சி தற்போது இருப்பதிலும் விட மிகப் பலமான நிலையை அடையும். அத்தோடு பல மாகாண சபைகளில் ஆட்சியைத் தனித்துக் கைப்பற்ற முடியாவிட்டாலும், ஆட்சியை அமைக்கும் தரப்பைத் தீர்மானிக்கும் கட்சியாக ஐ.தே.க. உருவாகும். பல மாகாண சபைகளில் தனித்து அதிக ஆசனங்களைப் பெறுவதும் உறுதி. அதனால் போனஸ் ஆசனங்களும் அங்கங்கே கிடைக்கும். இப்படியெல்லாம் இருக்கும்போது ஜனாதிபதி மைத்திரியின் அரசியல் செல்வாக்கைக் காப்பாற்றுவதற்காக ஏன் பிரதமர் ரணில் தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கைக்கு இவ்வளவு ஈடுபாடாக ஆதரவு காட்டிச் செயற்பட வேண்டும்?'*** **- என்று ரணிலின் ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலரே பொருமுகின்றனராம்!**

**தேர்தலைத் தள்ளிவைக்க வகை செய்யும் விதத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட அரசமைப்புக்கான இருபதாவது திருத்தம் இவ்வாறு பல தரப்பு அழுத்தத்துக்கு - எதிர்ப்புக்கு - உள்ளாகியிருப்பதால், அதை நிறைவேற்றத் தேவையான பலத்தை - நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவை - திரட்ட முடியாமல் இருக்கும் என்பது தெளிவாகிவிட்டது.**

**அத்தோடு, இப்போது பதவிக் காலம் முடிவடையும் மூன்று மாகாண சபைகளுக்கும் ஒக்ரோபர் 3ஆம் திகதி முதல் வேட்புமனுக்களை ஏற்பது பற்றிய அறிவித்தலை தனக்குரிய சட்டக் கடப்பாடுகளின் அடிப்படையில் தேர்தல் ஆணையம் முன்னெடுப்பதற்கு முன்னர், இந்த இருபதாவது திருத்தத்தை நாடாளுமன்றில் நகர்த்துவதும் அசாத்தியமானதாகவே தென்படுகிறது,**

**எப்படிப் பார்த்தாலும், மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள், தற்போதைய தேர்தல் முறைப்படி உரிய காலத்தில் நடக்கும் என்பது உறுதியாகி வருகின்றது.**

**ஆக மொத்தத்தில், பிரதமர் ரணில் பிரேரித்துள்ள அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தம் 'அவுட்' என்பது தெளிவு.**

# தேசிய அரசின் உறுப்பினர்களுக்கு மைத்திரி - ரணிலின் கடிவாளம்!



கொழும்பு, ஓக. 14

கொழும்பு அரசியலில் சமகாலத்தில் பெரும் சர்ச்சை நிலைமை தோன்றியுள்ளதால், அது குறித்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தீவிர ஆலோசனை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் நிலைமை மற்றும் அரசியல் நிலைவரம் குறித்து, அவர்கள் இருவரும் அண்மையில் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர் என ஆங்கில ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை எவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது குறித்து இருவரும் கலந்துரையாடினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இருதரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை நீடித்தால், தேசிய அரசை முன்கொண்டு செல்வதிலும், அதன் நோக்கங்களை அடைவதிலும் சிக்கல் ஏற்படும் என்பதால், தற்போதைய முறுகல் நிலைமையை முடிவுக்கு கொண்டு வர இருவரும் நடவடிக்கைகளை எடுக்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் ஒரு கட்டமாக , தமது தேசிய அரசில் இடம் பெற்றுள்ள தங்களின் இரு பிரதான கட்சிகளின் உறுப்பினர்களையும் எல்லை மீறி அதிகம் பேச வேண்டாம் என இருவரும் கடுமையாக அறிவுறுத்தியிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க)

# அமைச்சர் சாகல ரத்நாயக்கவுக்கு வெளிவிவகார அமைச்சர் பதவி?





கொழும்பு, ஓக. 14

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு, சட்டம், ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் பெயர் முன்மொழியப்பட்டுள்ளது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ரவி கருணாநாயக்க அமைச்சர் பதவியில் இருந்து விலகியமையை அடுத்து, வெளிவிவகார அமைச்சராக சாகல ரத்நாயக்கவின் பெயர் முன் மொழியப்பட்டுள்ளது என அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, சாகல ரத்நாயக்கவின் வசமுள்ள சட்டம் , ஒழுங்கு அமைச்சர் பதவி மீண்டும் திலக் மாரப்பனவிடம் கையளிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

கடந்த 2015ஆம் ஆண்டு தற்போதைய அரசு பதவிக்கு வந்த போது திலக் மாரப்பனவே, சட்டம் ஒழுங்கு அமைச்சராகப் பதவி வகித்தார். எனினும், அவன்ட் கார்ட் சர்ச்சையில் சிக்கியமையை அடுத்து அவர் பதவி விலகியிருந்தார்.

முன்னதாக, வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு நவீன் திசநாயக்கவின் பெயரும் அடிபட்டது.

எனினும், அவர் தன்னிடம் உள்ள பெருந்தோட்டத்துறை அமைச்சர் பதவியை மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரண்டு நாள்களாக நுவரெலியாவில் தங்கியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கொழும்பு திரும்பியுள்ளார்.

எனவே , புதிய வெளிவிவகார அமைச்சருக்கான பரிந்துரையை அவர் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம மூலமாக ஜனாதிபதி மைத்திரிக்கு தெரியப்படுத்துவார் என்றும் கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கிடையே, வெளிவிவகார அமைச்சர் பதவிக்கு திலக் மாரப்பன, கலாநிதி சரத் அமுனுகம ஆகியோரின் பெயர்களும் அரசியல் வட்டாரங்களில் அடிபட்டமை குறிப்பிடத்தக்கது.

# நட்டத்தில் இயங்கும் 16 அரச நிறுவனங்கள்!



கொழும்பு, ஓக. 14

அரசுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் நிறுவனங்களில் 16 நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என நிதி அமைச்சர் மங்கள சமரவீர தகவல் வெளியிட்டுள்ளார்.


இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச நிர்வாகத்தின் கீழ் 400 அரச நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் 55 நிறுவனங்கள் மாத்திரமே வருமான நோக்கில் இயங்குகின்றன. ஏனைய 345 நிறுவனங்கள் வருமான நோக்கில் இயங்காதவை. அரசுக்கு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் 55 முக்கிய நிறுவனங்களில் 39 நிறுவனங்கள் மாத்திரமே லாபமீட்டுகின்றன.

ஏனைய 16 நிறுவனங்கள் தொடர் நட்டத்தில் இயங்குகின்றன என்றும் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

### மலேரியா மீள் எழுச்சியை தவிர்திடுவோம்

★மலேரியா நோய் கட்டுப்பாட்டினுள் இல்லாத நாடுகளுக்கு சென்று வருபவர்கள், கட்டாயம் மலேரியாத் தடுப்புக் குளிசைகளை பெற்றுச் செல்லுதல் வேண்டும். இவற்றை சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் பெற்றுக் கொள்ளமுடியும்.



★மீண்டும் நாட்டுக்கு திரும்பியவுடன், அருகிலுள்ள அரச வைத்தியசாலைகளில், மலேரியாவுக்கான இரத்தப் பரிசோதனையைச் செய்து கொள்ளல் வேண்டும்.

★காய்ச்சலுக்கு சிகிச்சை பெறும் சந்தர்ப்பங்களில் தங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்தை மறக்காது கூறுதல் வேண்டும்.

**தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.**

### நாளை

**15.08.2017**
**செவ்வாய்க்கிழமை**

நட்சத்திரம் : கார்த்திகை பி.இ.1.51 வரை
திதி : அட்டமி பி.ப. 04.03 வரை

சுபநேரம் :10.35 – 12.05 வரை
இராகுகாலம் : 03.05 – 04.35 வரை

# தமிழரசுக் கட்சியுடன் தனித்து பேச்சு நடத்தி உடன்பாட்டை எட்ட விரும்புகின்றது ரெலோ!



## கட்சியின் செயலாளர் ஸ்ரீ காந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 14

தமிழரசுக் கட்சியுடன், தனித்து பேச்சுநடத்தி அரசியல் தீர்வு விடயத்தில் உடன்பாடு ஒன்றை ஏற்படுத்திக் காத்திர மானநடவடிக்கைகளை எடுக்க ரெலோதலைமைக்குழுவிரும்பு கின்றது என அக்கட்சியின் செயலாளர் ஸ்ரீ காந்தா தெரி வித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன் தினம் காலை முதல் மாலை வரை இடம்பெற்ற ரெலோவின் தலைமைக்குழு கூட்டத்தின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

முதலமைச்சரின் அமைச்ச ரவை மாற்றத்திற்கு வழிசமைக் கும் முகமாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனை, அமைச்சு பதவியை இராஜினாமா செய் யுங்கள் என்று ரெலோ தலை மைக்குழு கோரியுள்ளது.

அரசமைப்புதிருத்தம்தொடர் பில் கொண்டு வர இருக்கின்ற 20ஆவது திருத்தம் தொடர்பில் விவாதித்து கூட்டமைப்பு ஒரு நிலைப் பாட்டிற்கு வருவதற்கு ஏதுவாக தமிழ்த் தேசியக் கூட் டமைப் பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுகின்றோம்.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு எங்களுடைய எழுத்து மூலமான வேண்டு கோள் அனுப்பப்பட்டிருக் கிறது.

மேலும், அரசமைப்பு விவ காரங்கள் சம்பந்தமாகவும், எங்களுடைய அடிப்படைக் கோரிக்கைகளை விட்டுக் கொடுக்காமல், அடிப்படை கோரிக்கைகளை சமரசம் செய்து கொள்ளாமல்-,

அதேநேரத்தில் இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளும் கூட்டாக அரசமைத்து அந்த அரசு நீடித்துக் கொண்டிருக் கின்ற இன்றைய அரசியல் சூழ்நிலை இனப்பிரச்சினை யைத் தீர்ப்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் என்பதையும் கருத்திற் கொண்டு இந்த அரசியல் தீர்வு முயற்சிகளை தொடர்ந்து விரைவாக முன்னெ டுப்பதற்கு ஏதுவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம்.

இது தொடர்பாக ஏற்கனவே சந்திப்பு ஒன்று நடை பெற்றது. அதில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலை வரும், தமிழரசுக் கட்சியினுடைய தலைவருமான சம்பந்தன், அந்தக் கட்சியினுடைய தலை வர் மாவை சேனாதிராசா, அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகி யோர் பங்கு பற்றினர்.

இருந்தாலும் கூட முழுமை யான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தமிழரசுக் கட்சியின் சார்பில் ஒரு குழுவும், எங்களது கட்சியின் சார்பில் ஒரு குழுவும் இந்த பேச்சு முயற்சிகளை முன்னெடுக்கின்றமை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தீர்வு விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க உத வியாக இருக்கும். அதனைத் தொடர்ந்து ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்டி அதில் பேசி அனைத்துப் பங் காளிக் கட்சிகளும் ஒரு நிலைப் பாட் டில் குரல் எழுப்பக் கூடிய நிலை உருவாகும் என கருதுகி றோம்.- என்றும் அவர் தெரிவித் தார். (க-100)

## நல்லூரை நோக்கி படையெடுக்கும் வெளிநாட்டவர்கள்!

அண்மைக்காலமாக நல் லூரை நோக்கி வெளிநாட்டவர் கள் படையெடுக்கின்றனர்.

ஈழத்தில் புகழ்பெற்ற ஆல யமான யாழ். நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் வெகு சிறப்பாக இடம்பெற்று வருகின்றது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பெருமளவிலான பக்தர்கள் நல்லூர் முருகன் ஆலயத்திற்கு வருகைதந்துள்ள நிலையில் வெளி நாட்டு முருக பக்தர்களும் நல்லூரை நோக்கி படையெடுத்துள்ளனர்.

இவ்வாறு வெளிநாடுகளில் இருந்து வருகை தந்துள்ள முருக பக்தர்கள் தமிழ் கலா சாரத்தைப் பிரதிபலிக்கும் வகை யில் ஆலயத்திற்கு வருகை தந்துள்ளனர். குறிப்பாக ஆண் கள் மேலாடையின்றி ஆலயத் திற்குள் சென்று வழிபாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இதேவேளை, அங்கு இடம் பெறும் பூஜைகளிலும் வெளி நாட்டவர்கள் ஆர்வமாகவும், பக்திப் பரவசத்துடனும் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப் பிடத்தக்கது.

## மன்னாரில் அன்னாசிச் செய்கை; பிரதேச மக்கள் கடும் விசனம்!





மன்னார், ஓக. 14

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக் குற்பட்ட பருப்புக்கடந்தான் பகுதியில் இஸ்ரேல் நாட்டின் பிரஜை ஒருவரால் மேற்கொள் ளப்பட்டு வரும் அன்னாசி பயிர்ச் செய்கை குறித்து பிர தேச மக்கள் விசனம் தெரிவித் துள்ளனர்.

இந்த நபர்கடந்த 2014 ஆம் ஆண்டு தொடக்கம் அன்னாசி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வருகிறார் என பிரதேசவாசி கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் தெரிவித் தவை வருமாறு:-

பருப்புக்கடந்தான் பகுதி யில் சுமார் 160 ஏக்கர் காடு அழிக்கப்பட்டு அன்னாசி பயிர் செய்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது எனத் தெரிவிக்கப்படுகின் றது.

காடு அழிக்கப்பட்ட நிலை யில் மரங்கள் துண்டு துண்டு களாக வெட்டப்பட்டு தென் பகுதிக்கு கொண்டு செல்லப் பட்டுள்ளன என்றும் தெரிய வருகின்றது.

வன ஜீவராசிகள் திணைக் களத்திற்குச் சொந்தமான இந்த காணி இலங்கையர் ஒருவர் ஊடாக இஸ்ரேல் நாட்டுப் பிர ஜைக்கு வழங்கப்பட்டுள் ளது.

அத்துடன், அன்னாசி பயிர் செய்கை மேற்கொள்ளப் பட்ட 160 ஏக்கர் காணியில் சுமார் 100 ஏக்கர் காணி பொது மக்க ளுக்குச் சொந்தமான காணி. 1989ஆம் ஆண்டு மாவட்ட செயலகம் ஊடாக அது மக்க ளுக்கு வழங்கப்பட்டது.

எனினும், இந்தக் காணியில் குடியிருந்த மக்கள் இடம் பெயர்ந்து தற்போது இந்தியா வில் வாழ்ந்து வருகின்றனர்.

மக்களுக்கு உரித்தான காணியை பெற்றுத் தருமாறு வன ஜீவராசிகள் திணைக்களத் தினரிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## அமைச்சர் ராஜிதவுக்கு எதிராக வழக்குத் தொடருகிறார் மஹிந்த!

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொத் துக்கள் குறித்து அமைச்சர் ராஜித சேனாரத்ன அடிக்கடி வெளியிட்டு வரும் கருத்துக் களுக்கு எதிராக மஹிந்த ராஜ பக்ஷ வழக்குத் தொடரத் தீர் மானித்துள்ளார் என கூட்டு எதிர்க்கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மத்தியகிழக்குநாடொன்றில்



ராஜபக்ஷவினருக்குச் சொந்த மான இரகசியமான வங்கிக் கணக்கில் 18பில்லியன்டொலர் கள் இருக்கின்றன என அமைச் சர் ராஜித சேனாரத்ன பல முறை ஊடக சந்திப்புகளின் போது குறிப்பிட்டிருந்தார். இந்த விவ காரத்தை ஒட்டி முதலில் வழக் குத் தாக்கல் செய்ய மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

## கண்டியில் முதலீட்டு சந்தை செயலமர்வு!

கொழும்பு, ஓக. 14

முதலீட்டு சந்தை தொடர் பாக பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும் தொடர் செயலமர்வில் மற்றுமொரு செயலமர்வு கண்டி பங்குச் சந்தை கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

இதன்போது, பங்குச் சந்தை முதலீடு தொடர்பில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

அத்துடன், இந்தத் துறை யுடன் தொடர்புபட்ட முக்கி யஸ்தர்கள் பலர் இந்தச் செயலமர்வில் உரையாற்றி யுள்ளனர்.

## வீடு புகுந்து துப்பாக்கிச் சூடு; பத்தேகமவில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஓக. 14

பத்தேகம - கொடவத்த தெற்கு பிரதேசத்தில் வீடு ஒன்றில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பத்தேகம நீதவான் நீதிமன்றின் பின்புறத்தில் உள்ள வீட்டிலே இந்தத் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொள்வதற்கு வந்துள்ள நபர் கதவை உடைத்து வீட்டிற்குள் சென்று, வீட்டில் நித்திரை செய்து கொண்டிருந்த நபரை சுட்டு விட்டு தப்பிச் செல் வதற்கு முயன்றுள்ளார்.

இதன்போது, துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் மற்றும் அவரது மனைவி, துப்பாக்கிப் பிரயோகத்தை மேற் கொண்ட நபருடன் சண்டையிட்டுள்ளனர்.

இதனையடுத்து, துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான நபரின் மனைவி மேற்படி துப்பாக்கி நபர் மீது பொருள் ஒன்றால் தாக்கியுள்ளார்.

இதனால், துப்பாக்கிதாரி படுகாயமடைந்துள்ளார். எனி னும் காயமடைந்த சந்தேக நபர் தப்பிச் சென்றுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் முன்னர் கடற்படை யில் பணி புரிந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது அவர் முச்சக்கர வண்டி சாரதியாகவுள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கை பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய அந்த நபர் தற்போது கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச் சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பத்தேகம பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்துள்ளனர். இதேவேளை, துப்பாக்கி சூட்டை மேற்கொண்ட சந்தேக நபர் கைபேசி மற்றும் துப் பாக்கியை அங்கு விட்டுச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இனப்படுகொலை புரிந்த கருணா மீது உடனடியாக நீதி விசாரணை வேண்டும்!

## வலியுறுத்துகிறார் கிழக்கு முதல்வர்

திருகோணமலை, ஓக.14

கடந்த காலத்தில் கிழக்கில் இனப்படுகொலை புரிந்து முஸ்லிம் சமூகத்தை அழிப்பதற்குத் தலைமை தாங்கிய கருணா குறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் வேண்டுகோள் விடுத்தார்.

ஏறாவூர் காட்டுப்பள்ளி மஸ்ஜிதுந் நூறுஸ் ஸலாமில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கருணா முஸ்லிம் சமூகத்தையும் தமிழ்ச் சமூகத்தையும் பிரிப்பதற்காக ஆயுத பலத்தோடு இருந்த போது பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டார். சமகாலத்தில் கருணா முஸ்லிம்களைப்பற்றி வெளியிடும் கருத்



துக்கள், அவர் ஆயுதபலத்தோடு இருந்த காலத்தில் எவ்வாறு முஸ்லிம் மக்களைப் படுகொலை செய்திருப்பார் என்பதற்குத் தக்க சான்றாகும்.

முஸ்லிம்- தமிழ்ச் சமூக உறவைச் சீரழிக்க நினைக்கின்ற கருணா போன்ற துரோகிகளுக்கு காலம் தக்க பதிலளிக்கும். நிராயுதபாணிகளாக முஸ்லிம் சமூகம் தொடர்ந்தும் இந்த நாட்டில் தன்னுடைய அரசியல் உரிமையைத் தக்க வைத்துக் கொள்ளும். இந்த விடயத்தில் நாம் கண்ணும் கருத்துமாக இருக்கின்றோம்.-என்றார். (ச)





## காரைதீவில் விபத்து: இருவர் படுகாயம்!

கல்முனை காரைதீவுப் பகுதியில் பிரதேச செயலக வாகனத்துடன் மோட்டார்சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில், இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய சுற்றுவட்டத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

இதில், படுகாயமடைந்த இருவரும் காரைதீவு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டனர். அதில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளமையால் அவர்கல்முனை அஸ்ரப் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளைக் காரைதீவுப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## மட்டு. மாவட்டத்தில் ஒரு நாளில் 92 மி.மீ. மழை!



மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பெய்த கடும் மழையால், 24 மணித்தியாலத்தில் 92 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என மாவட்டவானிலைஅவதானநிலையப் பொறுப்பதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார்.

மூன்று மணித்தியாலங்கள் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழை காரணமாகவறட்சியான பல இடங்களில் நீர் தேங்கியுள்ளது என பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக்காலமாக நாட்டின் பல பிரதேசங்களில் கடும் வறட்சி ஏற்பட்டது. இதன் காரணமாக குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியமை குறிப்பிடத்தக்கது. (ச)

## இயற்கை அனர்த்தத்தை எதிர்கொள்ள மட்டு. மாவட்டத்தில் விசேட திட்டம்!

### விரைவில் அமுல்படுத்தப்படும் என்கிறார் அரச அதிபர் சார்ள்ஸ்

மட்டக்களப்பு மாவட்டம் எதிர்கொள்ளும் வறட்சி மற்றும் வெள்ளப் பெருக்கு பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்துக்குள் தீர்வைப் பெற்றுக் கொள்ளும் வகையில், பல விசேட திட்டங்கள் அமுல்படுத்தப்பட உள்ளன.

-இவ்வாறு மாவட்ட அரச அதிபர் திருமதி சார்ள்ஸ் தெரிவித்தார்.

உன்னிச்சை கிராமத்தில் சிறுபோகச்செய்கை சிறந்த விளைச்சல் பெற்றமையை அடுத்து, அப்பகுதி விவசாயிகளால் இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுமார் 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் போன பல குளங்களை நாம் புனரமைத்திருக்கின்றோம். தொடர்ந்தும் சில குளங்களின் புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இப்பொழுது கித்துள் உறுகாமம் பெரு நீர்ப்பாசனக் குளங்களை இணைக்கும் வேலைத் திட்டத்துக்காக அரசு நிதி ஒதுக்கியுள்ளது.

மேலும், மட்டக்களப்பு மாவட்



டத்தில் ஏற்படுகின்ற வறட்சியைத் தடுப்பதற்காக உலக வங்கி உதவி செய்ய உள்ளது. அத்திட்டத்தின் கடைசி வரைவை நான் கொழும்பிலுள்ள உலக வங்கியின் அலுவலகத்தில் 3 மணித்தியாலங்கள் பார்வையிட்டேன்.

இந்த இரண்டு திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டால் மட்டக்களப்பு மாவட்டம் வருடாந்தம் எதிர்நோக்கும் 70 சத வீதத்துக்கும் மேலான வெள்ளம் மற்றும் வறட்சிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விடும். அதன் மூலம் விவசாயிகளின் வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படும்.

குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தில் பிரதமர் அலுவலகத்துக்கு நாங்கள் அனுப்பிய முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆயிரத்து 134 கிலோ மீற்றர் உள்ளக விவசாய வீதிகள் மற்றும் குளங்களைப் புனரமைக்கும் அந்தத் திட்டத்துக்கும் கிரான் பாலத்தைப் புனரமைப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பல தடைகளுக்கு மத்தியில் நாம் இந்த மாவட்டத்தில் பல அபிவிருத்திச் சாதனைகளை நிலை நாட்டியிருக்கின்றோம். அது கண்டு கொள்ளப்படாத போதிலும், அதன் நீண்டகால நன்மைகளை இந்த மாவட்ட மக்கள் அனுபவிக்கப் போகின்றமையையிட்டு எமக்கு ஆத்ம திருப்தி உள்ளது.- என்றார். (ச)




## துறைமுக உடன்படிக்கையை எதிர்த்து மட்டு. நகர் முழுவதும் சுவரொட்டிகள்!

'துறைமுக உடன்படிக்கையை எதிர்ப்போம்'எனும் சுலோகத்தைக் கொண்ட சுவரொட்டிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு நகர் முழுவதும் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. சோஷலிஸக் கட்சியினால் ஒட்டப்பட்டுள்ள அந்த சுவரொட்டிகளில் 'தொழிலாளர்களின் மண்டை உடைத்து கைச்சாத்திட்ட மக்கள் துரோக துறைமுக உடன்படிக்கையை எதிர்ப்போம்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## காத்தான்குடி ஸாவியா பள்ளிவாசல் வழிபாட்டுக்கு நேற்று கையளிப்பு!

காத்தான்குடி, ஓக. 14

புனரமைக்கப்பட்ட காத்தான்குடி ஸாவியா பள்ளிவாசலை பிரதேச மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

காத்தான்குடி மீரா பள்ளிவாசல் தலைவர் எம். சுபைர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ், சிறப்பு விருந்தினர்களாக ஹிரா பௌண்டேசன் செயலாளர் ஏ.எல்.எம். மும்தாஸ் மதனி, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.எஸ். சுபைர், ஜம்மியத்துல் உலமா பத்வா குழுத்தலைவர் ஏ.ஜி.எம். அமீன் பலாஹி , பிரதேச மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஸாவியா பள்ளிவாசல் நிர்வாகத்தால் இராஜாங்க அமைச்சருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)



# வெளிவிவகாரச் செயலராக நாளை பதவியேற்கின்றார் காரியவசம்!



கொழும்பு, ஓக. 14

வெளிவிவகார அமைச்சின் செயலராக பிரசாத் காரியவசம், நாளை பதவியேற்கவுள்ளார்.

அதேநேரளில்,தற்போது வெளி விவகார அமைச்சின் செயலராக உள்ள எசல வீரக்கோன், சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் செயலராகப் பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எந்தக் காரணத்தையும் வெளிப்படுத்தாமல், கடந்த மாதம் 29ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி வெளியிட்ட உத்தரவில், வெளிவிவகார அமைச்சின் செயலராக பிரசாத் காரியவசமும், சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் செயலராக எசல வீரக்கோனும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, 2004 ஆம் ஆண்டு தொடக்கம் அமெரிக்காவில், தூதுவராகப் பணியாற்றிய பிரசாத் காரியவசம், நாடு திரும்பி புதிய பதவியை ஏற்கவுள்ளார்.

கடந்த 1981ஆம் ஆண்டு வெளிவிவகாரச் சேவையில் இணைந்த பிரசாத் காரியவசம், ஜெனிவா, நியூயோர்க், நியாட் நகரங்களில் பல்வேறு இராஜதந்திரப் பதவிகளை வகித்தவர். அத்துடன், இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கான இலங்கையின் தூதுவராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விஜயதாச ராஜபக்ஷவிற்கு ஆதரவாக களமிறங்குகின்றனர் சுதந்திரக் கட்சியினர்!

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினரால் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்ற நிலையில்,அதற்குஎதிராகச்செயற்பட உள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிற்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஹாலி- எல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரவி கருணாநாயக்க அமைச்சுப்பதவியிலிருந்துவிலகியமை போல அரசியலிலிருந்து விலக வேண்டிய சிலர் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியில் இருக்கின்றனர் எனவும் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

## புலனாய்வினரின் செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் தீவிரம்!

சிங்கள நாளிதழ் தகவல்



கொழும்பு, ஓக. 14

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் நடவடிக்கைகள்தீவிரப்படுத்தப் பட்டுள்ளன என்று சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பணியில் இலங்கைப் பொலிஸாரின் சிறப்பு அதிரடிப்படை ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

வடக்கில் ஏதேனும் சம்பவங்கள் இடம்பெற்றால், தேவைப்படின் முப்படைகளின் உதவியைப் பொலிஸார் கோர முடியும்.

அவ்வாறான நிலையில், பொலிஸாருக்கும் சிறப்பு அதிரடிப்படையினருக்கும் உதவ இராணுவத்தின் வான்வழி நகர்வுப் படையணி தயார் நிலையில் உள்ளது.

எனினும், வடக்கில் இராணுவத்தினர் பொதுமக்களைச் சோதனையிடவோ, கைது செய்யவோமாட்டார்கள். அவர்கள் பொலிஸாருக்கும், சிறப்பு அதிரடிப்படையினருக்கும் மாத்திரம் உதவுவர்.

அதேவேளை, அரசபுலனாய்வுப் பிரிவுக்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவு உதவிகளை வழங்கும் என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## ஸ்ரீ.ல.சு.கவின் புதிய அமைப்பாளர்கள் 2 ஆம் திகதிக்கு முன் நியமனம்!

கொழும்பு, ஓக. 14

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிடமாகவுள்ள தொகுதிகளுக்கான புதிய அமைப்பாளர்கள் எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் நியமிக்கப்படவுள்ளனர் என அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்தை செயற்படுத்தாத சகல தொகுதி அமைப்பாளர்களும் தங்களது பதவிகளை இழக்க நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியின் சவால்களுக்கு முகம்கொடுக்கத் தெரிந்த, கட்சிக்காக கடுமையாக உழைத்த கட்சி உறுப்பினர்கள் புதிதாகத் தொகுதி அமைப்பாளர்களாகத் தெரிவு செய்யப்படுவர் எனவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## தென்னிலங்கை அதிவேக பாதையில் ஐந்து வாகனங்கள் மோதி விபத்து!

கொழும்பு, ஓக. 14

தென்னிலங்கையின் அதிவேகப் பாதையில் ஐந்து வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

அதிவேகப் பாதை, கொட்டாவைப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் பகுதியில் இந்த விபத்து நேற்று முன்தினம் ஏற்பட்டுள்ளது.

கார், வான், பேருந்து மற்றும் இரண்டு 'கப்' வண்டிகளே இவ்வாறு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தின் காரணமாக இருவர் காயமடைந்த நிலையில் அதிவேகப் பாதை ரோந்துப் பொலிஸாரின் உதவியுடன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தின் காரணமாக சனிக்கிழமை முன்னிரவில் அதிவேகப் பாதையின் தென்னிலங்கை நோக்கிய வழிப்பாதையில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

## சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஓக. 14

சட்டமா அதிபர் திணைக்களத்தின் இரு அதிகாரிகளுக்கு எதிராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி பிணை முறி கொடுக்கல் வாங்கல் மோசடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவில், கடமையாற்றி வரும் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகள் இருவருக்கு எதிராகவே இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் கடந்த வெள்ளிக் கிழமை கடிதம் ஒன்றின் ஊடாக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வடக்கைப் பார்வையிட வருகிறார் அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர்!

கொழும்பு, ஓக. 14

வடக்கின் நிலைமைகளை நேரில் கண்டறிவதற்காக அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் இம்மாத இறுதியில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வடக்கிற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என்று இராணுவத் தளபதி லெப்டினன் - ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.



புதிய இராணுவத் தளபதியாகப் பதவியேற்ற பின்னர், முதல் முறையாக கடந்தவாரம் கண்டியில் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார் லெப்டினன் - ஜெனரல் மகேஷ் சேனநாயக்க.

இதன்போது வடக்கின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்திலேயே, வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களிடம், இராணுவத் தளபதி கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அஸ்கிரிய பீடாதிபதி வரும் 28, 29 ஆம்திகதிகளில் வடக்கேபயணம் மேற்கொள்ளவுள்ளார்.

# ஐ.தே.கட்சியின் கொள்கையே மைத்திரியின் கொள்கையாகும்!




கொழும்பு, ஓக. 14

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கையை நடைமுறைப் படுத்தும் முன்னணிக் குழுவாக ஜனாதிபதி தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி காணப்படுகிறது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கை பொதுஜன முன்னணியின் கண்டி மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஒருபோதும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வதோ, தனியார் மயப் படுத்துவதோ இல்லை என்றும், ஐ.தே.கவின் கொள்கையே அதுவாகும் என்றும் இதனால், தமது கட்சியின் கொள்கையுடன் நேரடியாக முரண்படும் ஒரு கட்சியுடன் தொடர்ந்தும் ஆட்சியில் ஒட்டியிருக்க முடியாது எனினும் தற்போதைய ஸ்ரீ ல.சு.கயின் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஊடகங்களிடம் கூறியிருந்தமை குறிப் பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir



# தங்கம் கடத்த முயன்ற இந்தியர் மூவர் கைது!

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் சம்பவம்

கொழும்பு, ஓக. 14

தங்கத்தை வெளி நாட்டுக்குக் கடத்திச் செல்ல முயற்சித்த இந்தியர்கள் மூவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலை அடுத்து, அவர்கள் விமான நிலையத்தில் சோதனை மேற்கொண்டனர்.


இதன் போது தங்கத்தை அவர்கள் தங்களது உடலில் மறைத்து வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச்சந்தேகநபர்களிடம் இருந்து 117 கிராம் தங்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

# இந்த ஆட்சியில் தவறுகள் இருந்தாலும் நாட்டுக்கு வேறு அரசு தேவையில்லை!

## நவசம சமாஜக் கட்சித் தலைவர் விக்கிரமபாகு தெரிவிப்பு



கொழும்பு,ஓக. 14

இந்த ஆட்சியில் சில தவறுகள் இருந்தாலும், வேறு அரசு ஒன்றை ஏற்படுத்தும் தேவையில்லை.

-இவ்வாறு நவசமதத் சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். வாக்குறுதிகளை மீறிச் செல்ல இடமளிக்கப் போவதில்லை. தற்போதைய அரசில் சிறிய தவறுகள் ஏற்படுகின்றன. அந்தத் தவறுகளைத் திருத்திக் கொள்ளுமாறு மக்களுடன் இணைந்து அழுத்தங்களைக் கொடுப்போம்.

மேலும், வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு கோரி சிவில் அமைப்புகள், அரசியல் கட்சிகள் என தற்போதைய அரசை ஆட்சிக்குக் கொண்டு வரப் பங்களிப்புச் செய்த அனைத்து தரப்பினரும் இணைந்து விகாரமஹாதேவி பூங்காவில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றை நடத்தத் தீர்மானித்துள்ளோம். -என்றார். (ச)

## தினசரி ராசி பலன் 14.08.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 30 ஆம் நாள் ஸப்தமித்திதி இரவு 7.45 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம்: பரணி பி.இ. 3.56 மணி வரை. பின்னர் கார்த்திகை. மரணயோகம் இரவு 7.45 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: காலை 7.36 மணி முதல் 9.09 மணி வரை. சுபநேரம். பகல் 12.05 மணி முதல் 1.35 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி: ஆடிமாத தேய்பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திரவழிபாடு: பரணி.**

### ‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** சுபீட்சமான நாள். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். காரியங்கள் தடையின்றி நடைபெறும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். புதிய வீடு வாங்கும் முயற்சி வெற்றிபெறும்.

**ரிஷபம்:** கவலையான நாள். பிறர் பிரச்சினைகளில் தலையிடுவதால் பிரச்சினைகள் ஏற்படும். பிரயாணத்தால் குடும்பத்தில் இருந்து விலகியிருக்க நேரிடும்.

**மிதுனம்:** நன்மையான நாள். வியாபார விருத்தி உண்டாகும். வெளிநாடு செல்ல நிலவியதடை நீங்கும். தொழில் பிரிவினருக்கு புதிய தொடர்புகளும், நட்பும் தொழில் வளர்ச்சிக்கும் பயன்படும்.

**கடகம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள், தொழில் ஸ்திரமின்மை, பிறரின் தலையீட்டால் கௌரவம் ஆகியன உண்டாகி விலகும்.

**சிம்மம் :** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. பணம் பல வழிகளாலும் வந்து சேரும். குடும்ப உறவு சீராக இருக்கும் முயற்சிகள் யாவும் கை கூடும்.

**கன்னி:** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல்கள் அதிகரிக்கும். பணப் பற்றாக்குறையால் சிலர் கடன் வாங்க அலைவார்கள்.

**துலாம் :** யோகமான நாள். காரியங்களில் வெற்றி ஏற்படும். வீட்டில் மகிழ்ச்சி நிலவும். வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் நிறைவேறும்.

**விருச்சிகம் :** அனுகூலமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் விருத்தியும், மேன்மையும் இருக்கும்.

**தனுசு :** இனிமையான நாள். சொத்து பாகப்பிரிவினைகள் சுமுகமாகத் தீர்வடையும். உத்தியோகத்தர்களுக்கு மேலிடத்தில் சலுகை நீண்ட கால முயற்சிகள் அனுகூலமாகும்.

**மகரம்:** துயரமான நாள். குடும்ப அமைதிகுறையும். தொழிலில் அலைச்சலும், வெறுப்பும் ஏற்படும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் உண்டாகும்.

**கும்பம் :** விருத்தியான நாள். தனவரவு அதிகரிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் திருப்தியளிக்கும். குடும்ப நட்புறவு மேலோங்கும்.

**மீனம் :** புகழ்மிக்க நாள். வருமானம் பெருகும். சுயதொழில் புதுவித முயற்சியில் விருத்தி அடைவார்கள். கலைஞர்களின் நடிப்புத் திறமையால் அரசு வழியால் புகழ், பாராட்டு, விருதுகள் கிடைக்கும்.

சந்திராட்டமநாள்: உத்தரம் 2, 3, 7 ஆம் அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்களில் உதித்தோர் அவசியம் சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# சிசுவைப் புதைத்த 2 பெண்கள் மட்டுக்கலை பகுதியில் கைது!

லிந்துலை, ஓக. 14

லிந்துலைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மட்டுக்கலை பகுதியில் பிறந்த சிசுவை புதைத்த இரண்டு பெண்களை, லிந்துலைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

சிசுவை பிரசவித்த பெண்ணும், அவரது தாயாருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அந்தச் சிசு கடந்த வியாழக்கிழமை பிறந்துள்ளது என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட பெண்கள் நுவரெலியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச)

# யாழ்.மரியன்னை பேராலய நற்கருணைப் பெருவிழா


யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலய வருடாந்தத் திருவிழா கடந்த 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி நடைபெற்று வருகிறது.

நற்கருணைப் பெருவிழா இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகும். நாளை செவ்வாய்க்கிழமை காலை 5.15 மணி முதல் திருப்பலியும் காலை 6 மணிக்கு விண்ணேற்பு பெருவிழா திருப்பலியும் இடம்பெறும்.

# ‘நல்லைக் குமரன்’ மலர் வெளியீடும் சமய அறிவுப் போட்டி பரிசில் வழங்கலும்

## இம்முறை ஆறு. திருமுருகனுக்கு யாழ் விருது



யாழ்ப்பாணம், ஓக. 14

யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழு, நல்லூர்கந்தசுவாமி கோவிலின் உற்சவகாலத்தில் ‘நல்லைக் குமரன்’ சிறப்பு மலர் வெளியிடுகின்றமை வழமை.

இந்த மலர் வெளியீடு நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.15 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோவிலில் ஆரம்பமாகி ஊர்வலமாக நல்லைக் குமரனின் 25 ஆவது மலர் எடுத்துவரப்பட்டு நாவலர் வீதியில் உள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.

இந்த வெளியீட்டு விழாவில் வைத்து யாழ்.விருது வழங்கப்படுவதுடன், யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் தரம் 6, 7, 8, 9, 10, 11 ஆகிய வகுப்புக்களுக்கு சைவ சமய பாடத்தில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற வகுப்பு ரீதியாக முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப்பெற்ற மாணவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன.

இந்த வகையில் இம்முறை ‘யாழ் விருது’ தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும், சிவபூமி அறக்கட்டளை நிலையத்தின் தலைவரும், இந்துமா மன்றத்தின் உபதலைவரும், தெல்லிப்பழை தமிழ்ச் சங்கத்தின் போசகரும் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபருமான கலாநிதி ஆறு.திரு முருகனுக்கு வழங்கப்படுகின்றது.

சைவ சமய பாடத்தில் வகுப்பு ரீதியாக முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**தரம் 06** - முதலாமிடம்: ஈஸ்வரன் ஆதவன் (யாழ். இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்:சிவகணேசன்அணந்திகன் (யா.ஹட்லிக் கல்லூரி), மூன்றாம் இடம்: யதுர்சிகா விஜய குமார் (யா.வேலணை மத்திய கல்லூரி), நேருஜா ஜீவதாபன் (யா.உயரப்புலம் குணபாவன் வித்தியாலயம்).

**தரம் 07** - முதலாம் இடம்: ஹருணி ஞானராசா (வேம்படி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்:யமுனானந்தன்சரவணன் (யாழ்.இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்: சிறிஷாயினி ஹரிதாஸ் (யா.வல்வை மகளிர் மகா வித்தியாலயம்).

**தரம் 08** - முதலாம் இடம்: நிதுர்சிகா சுபாஸ்கரன் (யா. விக்னேஸ்வரக் கல்லூரி), இரண்டாம் இடம்: மதியழகன் டினோஜன் (யா.மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), மூன்றாம் இடம்: முருகானந்தன் மிதுசன் (யா.வட்டு இந்துக் கல்லூரி).

**தரம் 09** - முதலாம் இடம்: துஷானிகா மகேஸ்வரன் (யா. இந்து மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்: அருமைநாயகம் மோகனராஜ் (யா.இந்துக் கல்லூரி), மூன்றாம் இடம்: சபீனா திலீபன் (யா.வேம்படி மகளிர் கல்லூரி).

**தரம் 10** - முதலாம் இடம்: சிவப்பிரியா சிவப்பிரகாசம் (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), இரண்டம் இடம்: ரிஷானி திருச்செல்வம் (யா.அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்), மூன்றாம் இடம்: பார்கவி சிவகரன் (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி).

**தரம் 11** - முதலாம் இடம்: லிலிதாம்பிகை மகேந்திரன் (யா.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்: சுபேந்திரன் பிரணவன் (யா. ஹாட்லிக் கல்லூரி), மூன்றாம் இடம்: லோகிதா அருணகிரிநாதன் (யா.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாநகர சபை ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான பொ.வாகீசன் அறிவித்துள்ளார். (ச)

காலைக்கதிர் Kalaikkathir



2006 ஒகஸ்ட் 14 ஆம் திகதி– செஞ்சோலை வளாகத்தில், ஜீ.சி.ஈ. உயர்தர மாணவர்களுக்கான வதிவிடத் தலைமைத்துவப் பயிற்சி நெறி இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம், அதன் மீது இலங்கை விமானப் படையின் குண்டு வீச்சு விமானங்கள் மூர்க்கத்தனமாகக் குண்டுகளை வீசித் தாக்கின. இதில் 61 இற்கும் அதிகமான சிறுமி கள் கொல்லப்பட்டனர். நூற்றியம்பதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர். உயிரிழந்தவர்களும், படுகாயமடைந்தவர்களும் விடுதலைப் புலிகளின் சிறுவயதுப் போராளிகள் என்றும் அது போராளிகளின் பயிற்சி முகாம் என்றும் அப்போது கதைவிட்டது கொழும்பு. அந்தச் செஞ்சோலைப் படுகொலைகளின் 11 ஆவது வருட நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

# செஞ்சோலை கொடூரம்!

முல்லைத்தீவு மாவட்டம் வள்ளிபுனத்தில் 'செஞ்சோலை' சிறுமிகள் இல்ல வளாகமொன்று இருந்தது. 2006 ஒகஸ்ட் 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணியளவில் கண்மூடித்தனமான வான் தாக்குதல்களுக்கு இலக்காகியது செஞ்சோலை. பேரினவாத அரச படைகளின் நான்கு அதிவேக யுத்த விமானங்கள் மிலேச்சத்தனமாக வீசிய 16 குண்டுகளும் 61 பாடசாலை மாணவிகளின் உயிர்களைப் பறித்தமையுடன் 155 இற்கும் அதிகமான மாணவிகள் படுகாயமடையவும் செய்தன. கொல்லப்பெட்டவர்களில் சிலரது உடல்கள் சிதறடிக்கவும் பட்டன.

காயமடைந்தவர்கள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, தர்மபுரம், கிளிநொச்சி ஆகிய பொது வைத்தியசாலைகளிலும் தனியார் வைத்தியசாலைகளிலும் உடனடியாகச் சேர்க்கப்பட்டனர். தமது பிள்ளைகள் தங்கியிருந்த பகுதி மீது குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றமையை அறிந்த பெற்றோர் அலறியடித்தவாறு செஞ்சோலை வளாகத்துக்கு ஓடிவந்தனர். கொல்லப்பட்டவர்களில் தமது பிள்ளையும் உள்ளாதா என்ற ஏக்கத்துடன் இறந்து கிடந்த மாணவிகளைத் தேடிய குடும்பத்தினர் கொல்லப்பட்டவள் தமது பிள்ளை தான் என தெரிந்ததும் கதறிய கதறல்கள் அங்கிருந்த அனைவரையும் அழவைத்தது.

''பத்து நாளும் என்னால விட்டிட்டு இருக்க ஏலாதுண்டு முதலில் மாட்டேன் என்றுதான் சொன்னேன். ஆனால், நல்ல விஷயம் எண்டு எல்லாரும் சொன்னதால தான் விட்டனான். கடைசியில இப்படியாப் போச்சே'' எனத் தலையில் அடித்து கதறிய தாயாரொருவர் தன் மகளைத் தூக்கி வா வீட்ட போவோம் என கேட்டதும் அனைவரும் கதறிய முதனர்.

செஞ்சோலை வளாகத்தில் அப்பாவி மாணவிகளைத் தறிகெட்ட சிங்களப் படை கொன்றது மாத்திரமல்லாமல் கொல்லப்பட்டவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்திலுள்ள சிறுவர் போராளிகளெனக் கூறி வெளியுலகுக்கு உண்மையை மூடிமறைக்க முயன்றமை அனைவரையும் ஆத்திரமடையச் செய்தது.

செஞ்சோலை வளாகம் புலிகளின் பயிற்சி முகாமெனவும் அங்கு சிறுவயது போராளிகளே இருந்தனர் எனவும் கூறி 2004 ஆம் ஆண்டு தமது விமான மொன்று எடுத்த படமொன்றையும் காட்டியுள்ளன அரசுப் படைகள். இதைவிட ஒருபடி மேலே சென்ற பேரினவாத அரசின் அமைச்சரும் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக பேசவல்லவருமான கெஹலிய ரம்புக்வெல, கொல்லப்பட்டவர்கள் சிறுவயது போராளிகள், அரசுக் கெதிராகச் செயற்படும் எவராயினும் அதாவது வயது, பால் வேறுபாடின்றி கொல்வோம் எனக் கூறி தமது அரசும் இனவெறிபிடித்தே அலை கின்றது என்பதனை பறைசாற்றினார்.

ஆனால், சம்பவ இடத்திற்கும் வைத்தியசாலைகளுக்கும் நேரடியாகச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவும் 'யுனிசெவ்'வும் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி மாணவிகள் என்பதனை வெளிப்படுத்தின.

இதேவேளை, இந்தத் தாக்குதல்களுக்குப் புலிகள் பழிக்குப் பழிவாங்கிவிடுவார்களென்ற அச்சத்தில் தெற்கிலுள்ள பாடசாலைகள் மூடப்பட்டன. அப்படிச் செய்ததன் மூலம் அங்கே வள்ளிபுனத்தில் கொல்லப்பட்டவர்கள் அப்பாவி தமிழ் மாணவிகள் தான் என்பதனை அரசு மறைமுகமாக ஏற்றுக் கொண்டது.

பத்துநாள் பயிற்சிப்பட்டறை உண்மையில் கொல்லப்பட்டவர்கள் யார்? ஏன் அங்கு கூடியிருந்தார்கள்? காலை 7 மணிக்கு அவர்கள் என்ன செய்தார்கள்?

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வள்ளிபுனம் மக்கள் குடியிருப்புகள் நெருக்கமாகவுள்ள பகுதி. குடாநாட்டிலிருந்து 1995 இல் இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றவர்களுக்கு இதை நன்கு உணர்ந்து கொள்ளமுடியும். அங்குதான் 'செஞ்சோலை'வளாகமும் உள்ளது. செஞ்சோலை என்றதும் தாயகத்தைச் சேர்ந்த அனைவருக்கும் நன்றாக தெரியும்.

இந்த வளாகத்திலுள்ள அருகில் பல நலன்புரி நிலையங்கள், வேறு பல சிறுவர் இல்லங்கள் காணப்பட்டன. மனிதநேய நடவடிக்கைகள் நிறைந்த ஒரு பகுதியே வள்ளிபுனம்.

இந்த செஞ்சோலை வளாகத்தில் சிறுமியர் இல்லத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கவில்லை. அவர்கள் அந்த வருட ஜனவரியில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புதிய வளாகத்துக்கு சென்றுவிட்டனர்.

ஆனால், வள்ளிபுனம் - செஞ்சோலை வளாகம் தொடர்ந்தும் செஞ்சோலை வளாகமாகவே காணப்பட்டது. இங்கு வதிவிட பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்படுவது வழமையானதாக இருந்தது. காரணம் ஏற்கனவே சிறுமியர் இல்லமாக இது செயற்பட்டமையால் மாணவிகள் தங்கியிருந்து பயிற்சிகளை மேற்கொள்வதற்கு வசதியாக இவ்வளாகம் இருந்ததே. அத்துடன், இந்த வளாகம் ஐ.நா. அமைப்புகளூடாக பயிற்சிப் பட்டறைக்கான இடமென இலங்கை அரசாங்கத்தாலும் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதுபோன்ற பல காரணங்களால் இங்க பல பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றுவந்தன.

அதே போன்றதொரு பயிற்சிப் பட்டறை நடைபெற்றுக் கொண்டிருந்த போதே இலங்கை அரசின் விமானப் படை கோரத்தாண்டவமாடி தமிழரைத் துன்பத்தில் வாடவிட்டது. அந்த 11 ஆம் திகதி முதல் இச் செஞ்சோலை வளாகத்தில் க.பொ.த. உயர்தர மாணவிகளுக்கான 10 நாள் வதிவிடப் பயிற்சி நெறி நடைபெற்று வந்தது.

இந்தப் பயிற்சி நெறியின் 3 ஆம் நாளின் போதே இப்பேரனர்த்தம் ஏற்பட்டுள்ளது. சமூக தலைமைத்துவ திறன்கள், முதலுதவி, பால் சமத்துவம், தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், வினைத்திறனுடனான நேர முகாமை மற்றும் குழு வேலை போன்றவற்றில் மாணவிகளுக்கு பயிற்சியளிப்பதனை நோக்கமாகக் கொண்டே இப்பயிற்சிப் பட்டறை நடைபெற்று வந்தது. இதன் போது கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 500 க.பொ.த. உயர்தர மாணவிகள் கலந்து கொண்டிருந்தனர்

செய்தி கேட்டுக்கொண்டிருந்த மாணவிகளே அதிகளவில் கொல்லப்பட்டனர். காலை 7 மணியளவில் மாணவிகள் ஒன்றுகூடலுக்காகத் தயாராகிக் கொண்டிருந்தனர். அவர்களில் பலர் அப்போதைய யுத்த சூழ்நிலை குறித்து அறிய வானொலியில் செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தனர். இதன்போதே விமானங்கள் வட்டமிட்டு 16 குண்டுகளை அடுத்தடுத்து வீசின. செய்தியைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களே நேரடியாகத் தாக்குதலுக்கு இலக்காகினர்.

இதில் அதிகளவானோர் கொல்லப்பட்டமையுடன் பலருக்கு மோசமான காயங்களும் ஏற்பட்டன.

வேறு வேலைகளிலிருந்த மாணவிகள் அருகேயிருந்த காட்டுப் பகுதிகளுக்குள் ஓடிவிட்டனர் எனக் கூறப்பட்டது.

இதேவேளை, இந்தப் பயிற்சிப் பட்டறை குறித்து கல்விக் கழக பொறுப்பாளர் அச் சமயம் தகவல் வெளியிட்டார். அவர் கூறுகையில்-

வருடாந்தப் பயிற்சிப்பட்டறை இது. கிளிநொச்சி கல்வி வலயத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பயிற்சி நெறிக்கு பெண்கள் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் நிதியுதவியையும் ஆதரவையும் வழங்கியிருந்தது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட 18 பாடசாலைகளைச் சேர்ந்த உயர்தர மாணவிகளும் வேறு கல்வி நிலையங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பெண்களும் இப்பயிற்சியில் பங்கெடுத்திருந்தனர். சிங்கள அரசு தமிழ்ச் சமூகத்தின் கல்வி உரிமையை மறுத்துள்ளது. வரலாற்றில் சிங்கள தீவிரவாதிகள் எப்போதும் தமிழர்களின் கல்வி உரிமையைத் தாக்கியே வந்துள்ளனர்.- என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாணவர்கள் திட்டமிட்ட முறையில் அழிக்கப்படுவது இதுதான் முதற்தடவையல்ல. அரசின் முப்படைகளினதும் வெறியாட்டத்தால் அப்பாவித் தமிழர்கள் பட்டபாடு வார்த்தைகளால் எழுதிவிடமுடியாது.

2006 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் விமானத்தாக்குதலுக்கு இலக்கானது வள்ளிபுனம் செஞ்சோலை வளாகம். அங்கு கற்கை நெறிக்காகக் கூடியிருந்த செஞ்சோலை மாணவியர் பலரை நாம் இழந்தோம் அன்று.

2009 இல் வன்னியை இராணுவம் வல்வளைப்புச் செய்தபோது அந்தக் கோரமான நேரங்கள் செஞ்சோலைப் பிள்ளைகளையும் கடுமையாகத் தாக்கியது. பல குழந்தைகள் காயம் பட்டனர். சில குழந்தைகள் உயிரை விட்டனர். மீதிக் குழந்தைகள் செஞ்சோலைப் பணியாளர்கள் சிலரால் காப்பாற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தனர். அன்றைய செஞ்சோலை இன்னும் தமிழர் வாழ்வில் மறக்க முடியாத ஒரு உண்மையாக மனதை நெருடி நிற்கின்றது. ★







# “ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?”

261

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

ட்ரம்ப் மற்றும் அமெரிக்க இராணுவ/ உளவுத்துறை எந்திரத்தின் கூறுபாடுகளுக்கு இடையே கணிசமான கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், வரலாற்று பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வாக வன்முறையில் நம்பிக்கை வைத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி, இராணுவ அதிகாரத்தை விரிவாக்குவதன் மூலமாக உலகளாவிய அமெரிக்க மேலாதிக்கத்தைப் பேணுவதற்கு முனையும், அமெரிக்க கொள்கை வட்டாரங்களில் மேலோங்கியுள்ள சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.




அமெரிக்க முதலாளித்துவத்தின் நீண்டகால வரலாற்று வீழ்ச்சியை நிறைய துப்பாக்கிகள், நிறைய போர்க்கப்பல்கள், நிறையப் போர்கள் மற்றும் நிறையப் படுகொலைகளைக் கொண்டு ஈடு செய்துவிடலாம் என்ற சிந்தனையின் ஸ்தூலமான உருவடிவம் தான் USS ஜெரால்ட் ஃபோர்ட் போர்க் கப்பல்.

‘‘அமெரிக்க நூற்றாண்டு’’ என்பது அமெரிக்க விமானப்படைப் பலத்தின் பெரும் மேன்மையால் குணாம்சப் படுகிறது. உண்மையில் 1991 க்குப் பின்னர் இருந்து அமெரிக்கா தொடர்ந்து போரில் இருந்துள்ளது என்ற போதும், கடந்த ஆறு தசாப்தங்களாக ஒரேயொரு அமெரிக்க சிப்பாய் கூட எதிரி விமானத்தால் தாக்கப்பட்டதில்லை.

ஆனாலும், ரஷ்யா, சீனா மற்றும் அதன் ஐரோப்பிய கூட்டாளிகளுடன் கூட அதிகரித்தளவில் கூர்மையான மோதலுக்கு அமெரிக்கா நகர்ந்து வருகின்ற நிலையில், F-22, F-35 மற்றும் B-2 போன்ற ‘‘கண்டறியவிலா இரகசிய’’ போர்விமானங்கள் மற்றும் விமானந்தாங்கி போர்க்கப்பல்கள் உட்பட அதன் அதிநவீன ஆயுத அமைப்புமுறைகள், ரஷ்யா, சீனா அல்லது ஈரான் போன்ற சற்றே சிறிய பிராந்திய சக்தி உடனான ஒரு சுட்டுவீழ்த்தும் போர் சம்பவத்தில்



கணிசமான இழப்புகளைச் சந்திக்கும் என்பது அதிகரித்தளவில் தெளிவாகி கொண்டிருக்கிறது.

இந்த யதார்த்தத்தை உணர்ந்து தளபதி மார்க் A. மில்லி குறிப்பிடுகையில், அமெரிக்கா மோதல்களுக்கான தயாரிப்பில் இறங்க வேண்டியுள்ளது, அவ்விதமான மோதல்களின் ‘‘வன்முறை அளவுகள் மிகப்பெரியளவில் இருக்கும் என்பதோடு, அது, உலகம், இரண்டாம் உலக போருக்குப் பின்னர் பார்த்திராத அளவுகளுக்கு இருக்கக் கூடும்’’ என்றார்.

உலகெங்கிலும் மூச்சடைக்கும் அளவிலான அதன் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் பரந்தளவிலான அமெரிக்க ஆயுதச் செலவினங்கள் இருந்தாலும், அமெரிக்க இராணுவ, பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் மேலாதிக்க காலகட்டம் முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறது என்பது அதிகரித்தளவில் மறுப்பதற்கில்லை.

இதுதான் கடந்த மாதம் அமெரிக்க இராணுவ போர் கல்லூரி வெளியிட்ட



ஓர் ஆய்வின் தீர்மானமாக இருந்தது. அமெரிக்க அரசியல் மேலாதிக்கம் ‘‘வெறுமனே மங்கி கொண்டிருக்கவில்லை’’, மாறாகப் ‘‘பொறிந்து போய் கொண்டிருக்கிறது’’ என்று வலியுறுத்தியது.

‘‘இரண்டாம் உலகப் போரில் இருந்து முதலில் உருவான ‘‘ஒழுங்கமைப்பு, ‘‘சோவியத் ஒன்றியத்தின் பொறிவுடன் ஒரு துருவமுனைப்பட்ட அமைப்பு முறையாக மாற்றமடைந்தது’’ என்று அந்த அறிக்கை குறிப்பிட்டுச் செல்கிறது. அது தொடர்ந்து குறிப்பிடுகையில், ‘‘பனிப்போருக்கு பிந்தைய 17 ஆண்டு காலத்தின் போது அமெரிக்க அதிகாரம் இன்றியமையாத விதத்தில் சவாலுக்கிடமின்றி ஒரு ஈடிணையற்ற காலமாக இருந்தது’’. ஆனால், ‘‘நாம் ஒரு புதிய சகாப்தத்துக்குள் நகர்ந்து கொண்டிருக்கிறோம்.’’

சீனா மற்றும் ரஷ்யா போன்ற ‘‘திருத்தல்வாத’’ சக்திகளின் எழுச்சியால், ‘‘அது-கடந்த காலத்தைப் போல-இனியும் பரந்தரீதியில் நீடித்த மற்றும் நிரந்தர உள்நாட்டு இராணுவ மேலாதிக்கத்தை தன்னியல்பாக உருவாக்க முடியாது’’, என்றளவிற்கு அமெரிக்கா மிகவும் பலவீனமடைந்துள்ளது.

இந்த நிலைப்பாடு, விரைவில் வெளிவரவிருக்கும் ஒரு நூலில் வரலாற்றாளர் Alfred W. McCoy அறிவிக்கும் ஒரு மதிப்பீட்டுடன் பொருந்துகிறது. ‘‘உலகளாவிய அமெரிக்க அதிகாரம் என்று வருகையில், அனேகமாக 2020 வாக்கில் எதிர்மறை போக்குகள் துரிதமாக தீவிரமடைந்து, 2030 க்கு முன்னதாக ஒரு ஆபத்தான திரட்சியை எட்டக்கூடும் என்பதையே கிடைக்கும் அனைத்து பொருளாதார, கல்விசார், தொழில்நுட்ப தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. இரண்டாம் உலக போரின் தொடக்கத்தில் வெற்றி ஆரவாரத்துடன் பிரகடனப்படுத்தப் பட்ட அமெரிக்க நூற்றாண்டு, ஏற்கனவே கிழிந்து கந்தலாகி, யார் மீதாவது பழி சுமத்துவதைத் தவிர, 2025 வாக்கில் மங்கி போய், 2030 வாக்கில் முடிந்துவிடும்’’ என்றார்.

ஆனால் அமெரிக்காவின் ஒப்பீட்டளவிலான வீழ்ச்சியோ, ஏதோ விதத்தில், அமெரிக்க இராணுவ கவலைகளில் கடைசியானது தான். அமெரிக்க மேலாதிக்க உலக ஒழுங்கமைப்பின் பொறிவுக்குப் பின்னர், ‘‘சகல நாடுகளும் மற்றும் பாரம்பரிய அரசியல் அதிகார வடிவங்களும் அதிகரித்த அழுத்தத்தின் கீழ் உள்ளன’’ என்று இராணுவப் போர் கல்லூரி அறிக்கை குறிப்பிடுகிறது. ‘‘பனிப் போருக்குப் பிந்தைய உலகளா விய அமைப்பு முறையின் உடைவானது, நடைமுறையளவில் அனைத்து நாடுகளது அரசியல், சமூக மற்றும் பொருளாதார நூலிழையில் ஏற்பட்டுள்ள உள்ளார்ந்த வீழ்ச்சிகளோடு சேர்ந்துள்ளது’’ என்பதையும் அது சேர்த்துக் கொண்டது.

‘‘அரசாங்கங்களுக்கும் மற்றும் ஆட்சி செலுத்துவதற்கான அடிப்படை உரிமை மீதான அவற்றின் நிர்வாக முறைக்கும் இடையே அதிகரித்து வரும் இடைவெளி’’ குறித்து எச்சரித்த இதற்கு முந்தைய அறிக்கை ஒன்றை அது மேற்கோளிட்டது. ‘‘இன்று, அனைத்து நாடுகளும் அவற்றின் அதிகாரம், செல்வாக்கு, அது எட்டக் கூடிய தூரம் மற்றும் பொதுவான ஈர்ப்பு ஆகியவற்றில் ஒரு செங்குத்தான வீழ்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன’’. அதேவேளையில் ‘‘எண்ணற்ற அரசியல் அணிசேர்க்கை அல்லது விசுவாசத்தின் மாற்றீட்டு ஆதாரங்கள்’’ மக்கள் முன்வைக்கப் படுகின்றன என்பதையும் அது சேர்த்துக் கொண்டது.

தேசிய போட்டியாளர்களால் மட்டுமின்றி, மாறாக ‘‘அவை அடித்தளத்தில் கொண்டுள்ள பலவீனமான மற்றும் அமைதி குலைந்த சமூக ஒழுங்கமைப்பினாலும்’’ அச்சுறுத்தப்பட்டு, புதைமணலில் நின்று கொண்டு அனைத்து நாடுகளும் போட்டி நலன்கள் மீது ஒன்றோடொன்று சண்டையிட்டு வருகின்றன’’ என்றது நிறைவு செய்கிறது. இவ்விடயத்தில், புதைமணல் என்பது போர், சமூக சமத்துவமின்மை மற்றும் முதலாளித்துவத்தின் மீதே கூட மக்களிடையே அதிகரித்து வரும் எதிர்ப்பிற்கான உவமையாகும்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள அமெரிக்கா, ஒரேநேரத்தில் ரஷ்யா, சீனா, ஈரான் மற்றும் இப்போது அதன் நேட்டோ கூட்டாளிகளுடனும் கூட ஒவ்வொரு இடத்திலும் விளாசப்படுகிறது. ட்ரம்ப் அவரது விமானந்தாங்கி போர்க்கப்பலைப் படையில் இணைத்த அதே வாரயிறுதியில், பிரதிநிதிகள் சபை ஒரு சட்டமசோதா மீது ஓர் உடன்பாட்டை எட்டியது, அது ரஷ்யாவுடன் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐரோப்பிய நிறுவனங்களுக்குத் தடைவிதிக்கிறது, இந்நகர்வு, கசியவிடப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய துண்டறிக்கையின்படி, ‘‘ஒருசில நாள்களுக்குள்’’ ஐரோப்பிய ஒன்றியத்திடம் இருந்து பதில் நடவடிக்கைகளைக் கொண்டு வரும். *(கேள்வி தொடரும்)*





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



64




**அத்தியாயம் - V**

## கரவெட்டிக்குள் நகர்ந்தோம்

இன்னொரு பாரதூரமான தகவலை பாலகுமார் கொண்டுவந்தார். பாலாவும் நானும் கரவெட்டியில் இருக்கின்றமை இந்தியர்களுக்குத் தெரிய வந்துவிட்டதாம். எம்மைத் தீவிரமாகத் தேடிக் கைதுசெய்யுமாறு ஆணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. எனவே, தேடுதல் வேட்டை தீவிரமாகியபோது எமது மனநிலையிலும் மாற்றம் ஏற்பட்டது. நாம் கைது செய்யப்படுகின்றமை இனிமேல் தற்செயலாக இருக்கப் போவதில்லை. இந்தியர்களுடைய குறி எல்லாம் இப்பொழுது எம்மீதே இருந்தது. ஆனால், அவர்களில் பெரும்பாலானவர்கள் பாலாவை நேரில் கண்டவர்கள் அல்லர். அவருடைய அடையாளங்களும் அவர்களுக்குத் தெரியாது. பாலசிங்கத்தை எளிதாக அடையாளம் காணக் கூடியது அவருடைய வெள்ளைக்கார மனைவி மூலமாகவே என்பது தெளிவாகியது. முதலில் பாலசிங்கம் என்ற பெயர் உடையவர்களின் வீடுகளைப் படையினர் சோதனையிட்டார்கள். சிலரைப் பிடித்துச்சென்று அடையாள அணி வகுப்புக்குப் பின் விடுதலை செய்தார்கள். வேறு ஒரு விசாரணை முறையையும் கையாண்டார்கள். அந்தப் பகுதியில் ஒரு வெள்ளைக்காரப் பெண் எங்கே இருக்கிறார் என்று பொதுமக்களிடம் கேட்கத் தொடங்கினார்கள். வீடுவீடாகத் தேடுதல் நடத்தும் போது, ''ஒரு வெள்ளைக்காரப் பெண்ணை இந்தப் பகுதியில் பார்த்தீர்களா?'' என்று தீவிரமாக அவர்கள் விசாரிக்கும் செய்தி எம்மை எட்டியது. எம்மோடு பழகிக் கொண்டிருந்த எல்லோருக்குமே எனது நிறம் ஆபத்தைத் தோற்றுவித்தது. தேடுதல் சூடு பிடிக்கத் தொடங்க எனது வெள்ளைத் தோலை வெறுக்கத் தொடங்கினேன். அது வேறு கதை. ஆனால், எமது பகுதியில் சுற்றிவளைப்புத் தேடுதல் தீவிரம் அடைவதும் எமது வீட்டுக்கு மேலே உலங்குவானூர்திகள் சுற்றிவருவதும், இந்தியப் படையினர் எமது முகாமுக்கு மிக அருகாக வரத் தொடங்கிவிட்டார்கள் என்பதை எமக்கு உணர்த்தின. உலங்குவானூர்தியில் இருந்து எமது முகாம் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டதும் எமது சந்தேகம் உறுதியாயிற்று.

போர் தொடங்கிய நாள்களில் இருந்தே வடமராட்சி மீது இந்திய விமான நடமாட்டம் தீவிரப்பட்டிருந்தது. இராணுவப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கும் வானத்திலிருந்து தாக்குவதற்கும் உலங்குவானூர்திகள் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டன. பகல் வேளையில் அவற்றின் நடமாட்டம் அதிகம் இருக்கும். இரவில் குறைவு. இதனால் உலங்குவானூர்திச் சத்தம் அந்தப் புறச்சூழலுடன் சாதாரணமாக இரண்டறக் கலந்திருந்தது. தூரத்தில் உலங்குவானூர்திச் சத்தம் கேட்டதும் நாம் உசாராகிவிடுகின்றமை, எமது வாழ்க்கையோடு ஒட்டிக் கொண்டது. அந்தச் சத்தத்தில் இருந்தே அதன் தூரத்தையும் கணிப்பிட்டு விடுவோம். ஆனால், ஒருநாள், மாலை மங்கத் தொடங்கும் நேரம், தாழப் பறந்த ஓர் உலங்கு வானூர்தி தனது வழக்கமான பாதையை விட்டு, நேரே எமது வீட்டை நோக்கி வந்து, சுற்றி வட்டமடிக்கத் தொடங்கியதும் ஆபத்து வந்துவிட்டது என்பதை உடனே உணர்ந்தோம். தாக்குதல் நடவடிக்கை இது என்பதை உணர்ந்த மக்களும் உடனே ஆபத்துக்கு முகம் கொடுக்கத் தயாரானார்கள். போராளிகளும் தாம் செய்துகொண்டிருந்த வேலைகளை அப்படியே விட்டுவிட்டு, கட்டடங்களுக்குப் பின்னே பதுங்கிக் கொண்டார்கள். காயமடைந்த போராளிகள் பலமான ஒரு சிறிய கொங்கிறீட் கட்டடத்துக்குள் ஓரளவு பாதுகாப்பாக இருந்தார்கள். உலங்குவானூர்தி அருகே வரும்போது, பாலாவும் நானும் தோட்டத்தில் இருந்தோம். எமது வீட்டை நோக்கி உலங்குவானூர்தி மெதுவாகத் திரும்பத் தொடங்க பாதுகாப்பைத் தேடி ஓடினோம். அந்த வளவுக்குள் இருந்த தண்ணீர்த் தொட்டியின் சிமெந்துத் தூணுக்குப் பின்னே நின்று கொண்டோம். தூணில் முதுகை ஒட்டியபடி, சுற்றிவரும் உலங்குவானூர்தியின் கண்ணில் படாமல் அப்படியே சுற்றிச் சுற்றி அரக்கினோம். உலங்குவானூர்தியில் இருந்து தானியங்கித் துப்பாக்கிச் சூடு எமது வசிப்பிடத்தைச் சல்லடை போட்டது. தாம் ஒன்றில் நிறையச் சேதம் விளைவித்து விட்டதாக அல்லது போதுமான அளவு அச்சுறுத்தி விட்டதாக மனத் திருப்தியோடு அந்த விமானப் பறவை தனது தளம் நோக்கிச் சென்றது.

## வீடுகள் மாறும் படலம்

அதிசயம் என்னவென்றால் இந்தத் தாக்குதலின்போது, எமது போராளிகளோ அந்தச் சூழலில் வாழும் மக்களோ, யாருமே காயம் அடையவில்லை. எமது வீட்டுக் கூரையில் சில ஓடுகள் உடைந்தன. சில வாழை மரங்கள் சிதைக்கப்பட்டன. சூழவுள்ள காய்கறித் தோட்டத் தரையிலேயே பெரும்பாலான வேட்டுகள் தைத்திருந்தன. நாம் எல்லோருமே கொதிப்படைந்திருந்தோம். மக்கள் வாழும் பகுதியில் பொறுப்பற்ற முறையில் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்குதல் நடத்திய இந்தியப் படையினரைத் திட்டித் தீர்த்தோம். வானத்திலிருந்து தாக்குதல் நடத்துவதைப் பார்க்கும்போது, விரைவிலே நாம் வாழும் பகுதிக்குள் தாக்கி அழிக்கும் நோக்கத்தோடு இந்தியர்கள் வரப்போகின்றார்கள் என்ற சந்தேகம் உறுதிப்படுத்தப்பட்டது. ஆகவே, பாதுகாப்பான பகுதிக்கு நாம் இடமாறுவதைத்தவிர வேறுவழி இருக்கவில்லை. பெரிய குழுவாக ஒரே இடத்தில் இருக்கின்றமையைக் காட்டிலும் சிறிய சிறிய குழுக்களாக இருந்தால் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புக் குறைவாக இருக்கும் என்ற பொதுவான கருத்துத் தோன்றியது. அப்படியான நிலையில் பாதுகாப்பான வீடுகளைப் பெறுவதும் இலகுவாக இருக்கும். எனவே, வேறு வேறு திக்குகளில் செல்லத் தீர்மானித்தோம். இந்தியப் படையினர் தமது தேடுதலைக் குறிவைக்காத பகுதியில் உள்ள பாதுகாப்பான வீடொன்றில் தங்கியிருக்க காயமடைந்த போராளிகள் ஏற்பாடு செய்துகொண்டார்கள். நாம் தங்குவதற்கு வேறொரு வீடொன்றை சுக்ளா ஏற்பாடு செய்தார். எம்மிடமிருந்த குறைந்தபட்ச உடைமைகளைச் சுருட்டிக் கட்டிக்கொண்டு நாம் வெளியேறினோம். உயர்ந்த மதில்களும் ஒடுங்கிய ஒழுங்கைகளும் செறிந்த பாதையூடாகக் கரவெட்டியில் உள்ள வீடொன்றுக்குச் சென்றோம். ஒரு பெரிய வளவுக்குள் ஒரு விசாலமான செங்கல் வீடு. கிணறு பின்புறத்தில். நிழலுக்குத் தென்னை மரங்கள் அங்கே இருந்தன.

*பரம்பரை பரம்பரையான நில உடைமையாளரான அந்த மூதாட்டியும் அவருடைய கணவரும் தங்கள் செல்வத்தில் பெரும் பகுதியை தங்கள் பிள்ளைளின் கல்விக்காகச் செலவிட்டிருக்கிறார்கள். உண்மையில் யாழ்ப்பாண தமிழ் மக்களின் தனித்துவம் வாய்ந்த அம்சங்களில் ஒன்று கல்வி மீது அவர்கள் கொண்டிருக்கின்ற அதீத பற்றாகும். கல்வியை ஆழ்ந்த பற்றோடும் மன வைராக்கியத்தோடும் ஊட்டுவிப்பார்கள்.*

எமது பாதுகாப்பான வீட்டை நாம் அடைந்த போது, மூதாட்டி ஒருவர் தமதுகாணிக்குள்நடமாடுகின்றமையைக் கண்டோம். வீடு வெறுமையாக இருளடைந்து இருந்தது. வீட்டினுள் அந்த மூதாட்டிக்குச் சொந்தமான ஒரு சில உடைமைகள் மட்டும் இருந்தன. வீடு இருளடைந்து இருந்ததன் காரணம் மர நிழலல்ல. மனை அமைப்புச் சோதிடமே காரணம். வீட்டுச் சொந்தக்கார மூதாட்டி ஒரு சைவப் பழம். சோதிடத்திலும் நம்பிக்கை கொண்டவர். வீட்டைக் கட்டும் முன் மனை பார்க்கும் சோதிடரைக் குடும்பத்தினர் கலந்தாலோசித்திருக்கிறார்கள். அவருடைய ஆலோசனையின் படியே வீட்டுக்கான வரைபடம் வரையப்பட்டது. சமயலறையும் ஏனைய அறைகளும் எங்கே எங்கே இருக்க வேண்டும் என்பது சோதிடரின் ஆலோசனைப் படியே முடிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, அறைகள் இருளில் மூழ்கின. மற்றும் படி, மீதிப் பகுதிகள் வெளிச்சமும் வெப்பமுமாக இருந்தன.

பாதுகாப்பான புதிய வீட்டில் எமக்கு ஒவ்வோர் அறையைத் தேர்ந்து, நாம் குடியமர்ந்த பின், மூதாட்டி தமது கதையை எடுத்துரைத்தார். அந்தத் தருணத்தில் வடமராட்சியில் வாழ்ந்த முதியவர்களின் ஒரு பொதுப் பிரதிநிதியேஇந்தமூதாட்டி. ஒரு சிறிய கூனல். உதிர்ந்து நரைந்த கூந்தலை சிறிய கொண்டையாக முடிந்திருந்தார். தளர்வாக அணிந்திருந்த நூற்சேலை இவை அவருடைய வயதுபோன தோற்றத் துக்குச்சான்றுகள். அவருடைய சாதாரண வெளிறிய சேலையும் தாலி இல்லாத கழுத்தும் அவருடைய கணவனைப் பற்றி நாம் விசாரிக்க வேண்டியது இல்லை என உணர்த்தின. முதுமையும் கைம்மையும் பூண்ட தோற்றம் அவருடையது. யாழ்ப்பாண சமூக மட்டத்தின் உயர் சாதியாகக் கொள்ளப்படும் வெள்ளாளர் சமூகத்தைச் சேர்ந்தவர் அந்த மூதாட்டி. நீண்ட நாள் வாழ்ந்த முதியவர் என்ற தன்னம்பிக்கையோடு தமது குடும்ப வரலாறை அவர் கூறினார்.

யாழ்ப்பாண வெள்ளாள சமூகத்தின் சமூக முறைமைகள் பற்றி அவர் விளக்கினார். பரம்பரை பரம்பரையான நில உடைமையாளரான அந்த மூதாட்டியும் அவருடைய கணவரும் தங்கள் செல்வத்தில் பெரும் பகுதியை தங்கள் பிள்ளைகளின் கல்விக்காகச் செலவிட்டிருக்கிறார்கள். உண்மையில் யாழ்ப்பாண தமிழ் மக்களின் தனித்துவம் வாய்ந்த அம்சங்களில் ஒன்று கல்வி மீது அவர்கள் கொண்டிருக்கின்ற அதீத பற்றாகும். கல்வியை ஆழ்ந்த பற்றோடும் மன வைராக்கியத்தோடும் ஊட்டுவிப்பார்கள். கல்வித் தெய்வமான சரஸ்வதியை உயர் நிலையில் வைத்து வணங்குவார்கள். கலைமகள் விழா வரும் போது, யாழ்ப்பாண சமூகம், குறிப்பாகப் பெண்கள் மிக உற்சாகமாகப் பங்கு பற்றுவார்கள். எனது அனுபவத்தில் யாழ்ப்பாண சமூகம் தனித்துவம் கொண்டது என்பேன்.

(தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir









தாயகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் உள்ள தென்மராட்சி அபிவிருத்தி கழகங்கள் இணைந்து நடத்திய தென்மராட்சி விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சாவகச்சேரி பொன் விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் க.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக புலம்பெயர் மற்றும் தென்மராட்சி உறவுகளான சிவயோகன்,அசோகன்,செ. முகுந்தராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆங்கிலக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த 22ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ச- 21)



இரத்ததானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து திருமதி துரைசிங்கம் வத்சலா, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் இரத்தவங்கிக்குச் சென்று 40 ஆவது தடவையாக இரத்ததானம் வழங்கினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. (ச)





வல்வெட்டித்துறையைப் பூர்வீகமாகக் கொண்டு டென்மார்க்கில் தற்போது வசித்து வரும் தமிழ்ப் பெண் விமானியான அர்ச்சனா செல்லத்துரை கடந்த புதன்கிழமை வடமாகாண மகளிர் விவகார அமைச்சுக்கு வருகை தந்தார்.

இந்த நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)








யாழ். அரியாலை கண்டி வீதியில் இயங்கி வரும் யாழ். மாவட்ட தேசோதய சபையின் பிராந்திய நிலையங்கள் சாவகச்சேரி, கோப்பாய், உடுவில், பாஷையூர் யாழ். நாவலர் வீதி ஆகிய இடங்களில் கடந்த வெள்ளிக்கிழமை சர்வோதயத்தின் செயலாளர் விண்னி ஆரியரட்னவால் திறந்து வைக்கப்பட்டன. (ச-19)






சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் 2017/ 2018 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகப் பதவியேற்பு அண்மையில் தெல்லிப்பழை லயன்ஸ் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

2 ஆவது உதவி மாவட்ட ஆளுநர் லயன் பி.மகேந்திரன் புதிய நிர்வாகத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதையும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை பெண்நோயியல் மகப்பேற்று வைத்திய நிபுணர் ந.சரவணபவ 'பெண்நோயியலும் மகப் பேறின்மையும்' தொடர்பாக கருத்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனுடன் யாழ். மீலாத் விழா குழு ஒருங்கிணைப்பாளர் மௌலவி பி.ஏ.எஸ். சுபியான் கடந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பில் இந்த வருடமீலாத் விழா தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. (ச-19)



# மைத்திரியும் ரணிலும் 2015 இல் தாங்கள் செய்த ஒப்பந்த வாசகங்களை வாசித்துப் பார்த்தனரா?

## சிவில் சமூக செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ கேள்வி எழுப்புகிறார்

கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும், கடந்த 2015 ஆம் ஆண்டு செய்து கொண்ட ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை வாசித்துப் பார்த்தீர்களா என்று கேட்க விரும்புகிறோம் என சிவில் சமூக செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரண்டு வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், கடந்த 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை வாசித்துப் பார்த்தீர்களா என நாம் ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும் கேட்க விரும்புகிறோம்.

அந்த ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சங்களை கைவிடுவதற்கு நாங்கள் தயாரில்லை.

கடந்த 1994 ஆம் ஆண்டு



நடந்த சில குழப்பங்களால் அந்தப் போராட்டத்தை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனினும், இந்த நாட்டில் மீண்டும் இனவாதமோ, மத வாதமோ தலைதூக்கினாலோ, அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தினாலோ அதற்கு இடமளிக்கமாட்டோம்.

அவ்வாறானதோர் அரசியல் கலாசாரத்திற்கு நாங்கள் இனிமேல் இடம்கொடுக்க மாட்டோம்.

அன்று நாங்கள் போராட்டத்தைகைவிட்டோம். ஆனால், இந்தப் போராட்டத்தை கைவிடமாட்டோம்.

இதுஎமக்குகிடைத்திருக்கும் பொன்னான வாய்ப்பு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மலையக அரசியல் கட்சிகள். முஸ்லிம் கட்சிகள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அனைத்தும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான வாய்ப்பைஏற்படுத்தியமையை ஞாபகப்படுத்தவே நாம் நாளை 15 ஆம் திகதி வீதிக்கு இறங்கவுள்ளோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை கூட்டரசு நிறைவேற்ற வேண்டும்.

கடந்த 2015ஆம் ஆண்டு செய்து கொண்டுள்ள உடன்படிக்கையின் உள்ளடக்கங்களை முழுமையாக வாசித்துப் பார்த்தீர்களா? அதனை நாங்கள் அரச தலைவர்களிடம் கேட்க விரும்புகின்றோம் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பயத்துடன் வாழக்கூடிய நிலை குடிமக்களுக்கு அமையக்கூடாது!

## நீதிபதி இளஞ்செழியன் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 14

குடிமக்கள் பாதுகாப்பற்ற நிலையிலும், பயத்துடனும் வாழக்கூடிய நிலை அமையக் கூடாது என யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக சட்ட பீட மாணவர்களால் தொகுக்கப்பட்ட 'நீதம்' என்ற நூல் வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே நீதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீதித்துறையின் செயற்பாடுகள் மேலும் வினைத்திறன் பெற வேண்டும் என்பதில் எம் அனைவருக்கும் எந்தவித ஐயமுமில்லை. குற்றவியல் நீதித்துறை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

அவதானம் செலுத்துவது என்பது வெறுமனேதண்டனை வழங்குவதாக அர்த்தப்படாது, குற்றங்களைப் புரிபவர்களுக்கு அனைத்து வழிகளிலும் நீதியான செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், குற்றம் புரிபவர்கள்தப்பிச்செல்வது குறித்து கவனிப்பதையும் இது பொருள்படுத்தும்.

மேலும், குடிமக்கள் பாதுகாப்பற்ற நிலையிலும் பயத்துடனும் வாழக்கூடிய நிலை அமையக்கூடாது.- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# பெற்றோலிய விலைக் குறைப்பு; அரசிடம் மீதமான நிதி எங்கே?



## கேள்வி எழுப்புகிறார் பந்துல எம்.பி

கொழும்பு, ஓக. 14

உலக சந்தையில் பெற்றோலியத்தின் விலை குறைந்ததன் காரணமாக அரசிடம் மீதமான நிதிக்கு என்னநடந்தது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

கம்பஹா உடுகம்பளை பிரதேசத்தில்நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இன்றைய நிலையில் தேர்தலை நடத்தினால், அரசு தோல்வியடையும் என்ற காரணத்தினாலேயே இந்த அரசு இரண்டு வருடங்களுக்கு மேலாக உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்து வருகிறது என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும குறிப் பிட்டுள்ளார்.

கடந்த ஆட்சிக்காலத்தில் இப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால், சர்வதேசத் தடைகளை எதிர்நோக்க நேரிட்டிருக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எது, எப்படி இருந்த போதிலும்தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கை களையும் அரசு எடுத்து வருகிறது என அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

# ஜனாதிபதியைக் கூட்டமைப்பு சந்திக்க இன்னும் நேரம் ஒதுக்கப்படவில்லை

## எம்.ஏ. சுமந்திரன் எம்.பி.தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 14

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டபோதும், இதுவரை சந்திப்பிற்கான நேரம் வழங்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு முயற்சியில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுவருகிறது.

இந்த விடயத்தில் தலையிட்டு, புதிய அரசமைப்பு உருவாக்கத்தினை விரைவுபடுத்துங்கள் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கவிருக்கிறோம்.

எனினும், ஜனாதிபதியை சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறு கோரிக்கை விடுத்திருந்தோம். ஆனால், அதற்கான பதில் இன்னமும் கிடைக்கவில்லை.


ஜனாதிபதியைச் சந்திக்கும் பொழுது, வடக்கில் எற்பட்டுள்ள அசாதாரண நிலைமைகள் குறித்தும் எடுத்துரைப்பதற்கும் எண்ணியிருக்கிறோம்.

புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கான வழிகாட்டல் குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டும் அதனை நாடாளுமன்றத்தில் இன்னமும் முன்வைக்க முடியவில்லை.

இதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் தமது யோசனையை முன்வைக்காததால் அது தாமதமடைகின்றது. இதனை நாம் ஜனாதிபதியிடம் எடுத்துரைப்போம்.

விரைவில் அரசமைப்பு உருவாக்கத்தை துரிதப்படுத்துமாறு வலியுறுத்துவோம் - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நுவரெலியாவில் பெய்தது ஐஸ் மழை!



கொழும்பு, ஓக. 14

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் பல இடங்களிலும் மழை பெய்துள்ளது. இந்த நிலையில் நுவரெலியாவில் ஐஸ் மழை பெய்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா மற்றும் வெலிமடைப் பகுதிகளிலேயே இவ்வாறு ஐஸ் மழை பெய்துள்ளது எனதெரிவிக்கப்படுகிறது.

மத்திய மலை நாட்டில் அண்மைக்காலமாக அடை மழை பெய்து வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் மாலை சுமார் 3 மணிமுதல் 3.15 மணிவரை ஐஸ் மழை பெய்துள்ளது.

இதனால்அந்தப்பகுதிகளில் கடுமையான குளிர் நிலவியது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைக்கு ஆபத்து இல்லை: அனர்த்த முகாமைத்துவ நிலையம்!

கொழும்பு, ஓக. 14

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில், நேற்றுக் காலை ஏற்பட்ட நிலநடுக்கம் காரண மாக இலங்கையில் சுனாமி ஏற்படக்கூடிய ஆபத்து இல்லை என இடர் முகாமைத்துவமத்திய நிலையம் அறிவித்துள்ளது.

சுமத்திராத் தீவுக்கு மேற்கே 81 கிலோ மீற்றர் தொலைவில் கடலுக்கடியில் சுமார் 67 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இலங்கையின் அனைத்து கடலோரப் பகுதிகளுக்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் சுனாமி எச்சரிக்கை விடுத்திருந்தது.

ஆனாலும், இலங்கையில் சுனாமி ஏற்படக்கூடிய ஆபத்து இல்லை என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் சற்று முன் அறிவித்துள்ளது

சுனாமி குறித்து மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் பொதுமக்கள் அவதானமாகஇருக்கவேண்டும் என்பதற்காக மாத்திரமே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று, அனர்த்த முகாமைத்துவ மத்தியநிலையத்தின் பிரதிப் பணிப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவித்தல்களை ஊடகங்கள்வாயிலாக மக்களுக்குத் தெரியப் படுத்திக் கொண்டு இருப்பதா கவும் இதனால், மக்கள் பதற்ற மடையத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாவட்டத்துக்கு ஒரு லட்சம் உறுப்பினர்கள்; ஆதரவாளர்களுக்கு தினகரன் அதிரடி உத்தரவு!

அரசியலில் நீடிக்க வேண்டும் என்பதற்காக மாவட்டத்துக்கு குறைந்தது ஒரு லட்சம் பேரை, உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என ஆதரவாளர்களுக்கு தினகரன் உத்தரவிட்டுள்ளார்.

சசிகலா குடும்பத்தை அடியோடு ஒதுக்கிவிட்டு, கட்சி மற்றும் ஆட்சியை முழுமையாக தன் கட்டுப்பாட்டில் வைக்க, முதல்வர் பழனிச்சாமி திட்டமிட்டுள்ளார். இதை அறிந்த தினகரன், கட்சியைத் தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சித்துள்ளார். அவருக்கு, 20 எம்.எல்.ஏக்கள் ஆதரவு தெரிவித்தனர்.

அவர்கள் உதவியுடன், முதல்வர் தரப்பை மிரட்டி பணிய வைக்க முயற்சித்தார். ஆனால், முதல்வர் தரப்பினர் பணியவில்லை. மேலும், அவர், அ.தி.மு.க., அலுவலகம் வரவும் தடை விதித்தனர். அதிர்ச்சி அடைந்த தினகரன், தன்னிச்சையாக, மாவட்ட சுற்றுப்பயணத் திட்டத்தை அறிவித்தார். அத்துடன், தன் ஆதரவாளர்களுக்கு, கட்சிப் பதவிகளை வாரி வழங்கினார்.

இது, முதல்வர் தரப்பை எரிச்சல் அடையச் செய்தது. அதைத் தொடர்ந்து, தினகரன் நியமனமே செல்லாது என்ற நிலையில், அவர் நியமிக்கும் நிர்வாகிகள் பதவியும் செல்லாது என அவர்கள் தீர்மானம் நிறைவேற்றினர். அத்துடன், பழனிச்சாமி தரப்பினர், பன்னீர் அணியுடன் இணைவதற்கான பணிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

பன்னீர் அணியினர், தினகரனை மட்டுமின்றி, சசிகலாவையும் நீக்க வேண்டும் என நிபந்தனை விதித்துள்ளனர். இது, சசிகலா குடும்பத்தினரிடம், கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இரு அணிகளும் இணைந்து, தங்களை ஒதுக்கினால், தங்கள் குடும்ப ஆதிக்கம் முடிவுக்கு வந்து விடும் என்பதை உணர்ந்து, அனைவரும் இணைந்து செயற்படத் தொடங்கி உள்ளனர். இரு அணிகள் இணைப்பிற்கு முன், தன் ஆதரவாளர்கள் எண்ணிக்கையை அதிகரிக்க, தினகரன் முடிவு செய்துள்ளார்.

இதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும், 13 மாவட்ட பொறுப்பாளர்களை நியமித்துள்ளார். அவர்கள் தொகுதி வாரியாக, பொறுப்பாளர்களை நியமித்து, அ.தி.மு.க., தினகரன் அணி எனக் கூறி, உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கான உணவுச் செலவு, பயணச் செலவு, ஊதியம்



என அனைத்தும் மாவட்டப் பொறுப்பாளர்களால் வழங்கப்படுகின்றன.

தினகரனுக்கு ஆதரவாக, போஸ்டர் ஒட்ட வேண்டும் என்றால், சென்னையில் இருந்து இலவசமாக வந்து சேர்கிறது. அதேபோல், தினகரன் பேரவை பெயரிலும், உறுப்பினர் சேர்க்கை நடந்து வருகிறது.

இது குறித்து, அவரது ஆதரவாளர்கள் கூறியவை வருமாறு:

ஒவ்வொரு மாவட்டத்திலும், குறைந்தது ஒரு லட்சம் பேரை, உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் என தினகரன் உத்தரவிட்டுள்ளார். அதற்கான பணியைத் தீவிரப்படுத்தி உள்ளோம். இரு அணிகள் இணைந்தாலும் தனி அணியாக அரசியலை நடத்த வேண்டும் என்பதற்காக, உறுப்பினர் சேர்க்கையை தீவிரப்படுத்த தினகரன் உத்தரவிட்டுள்ளார். இரு அணிகள் இணைந்து சசிகலா குடும்பத்தைக் கட்சியிலிருந்து விலக்குவோம் என அறிவித்தாலும், தினகரன் தனித்து அரசியல் செய்வார்; ஆட்சியைக் கவிழ்க்கவும் தயங்க மாட்டார். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நினைக்கிறார் ஸ்டாலின்!

## தமிழிசை குற்றச்சாட்டு



முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அரசு மீது நம்பிக்கை இல்லா பிரேரணையைக் கொண்டு வருவோம் என ஸ்டாலின் கூறியது, குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க நினைப்பதையே காட்டுகிறது என்று தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்-

தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அரசின் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம் என தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின், கடந்த சில தினங்களுக்கு முன் தெரிவித்துள்ளார். அவர் கூறிய கருத்தில் அவருக்கே நம்பிக்கை இல்லை என்பது அவரது வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது. எதிர்க்கட்சித் தலைவரான ஸ்டாலின், குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நினைக்கின்றமையை இது காட்டுகின்றது.

மேலும், பா.ஜ.க.வின் தேசிய தலைவர் அமித்ஷா, ஒகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி முதல் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்ய உள்ளார். கட்சியின் அடிப்படைக் கட்டமைப்பை வலுப்படுத்தவும், கட்சித் தொண்டர்களைச் சந்தித்து உற்சாகப்படுத்தவும் அவர் தமிழகம் வருகிறார்.

தமிழகத்தில் ஆட்சி நடத்தும் அ.தி.மு.க.வை பா.ஜ.க. இயக்கவில்லை. தமிழக அரசு கொண்டு வரும் பல்வேறு நலத்திட்டங்களுக்குத் தேவையான உதவிகளை மட்டுமே மத்திய அரசு செய்து வருகிறது.- என்றும் தெரிவித்துள்ளார்.

# 27 கடற்கொள்ளையருக்கு தலா 7 ஆண்டு சிறை:

## மும்பை நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

27 சோமாலிய நாட்டு கடற்கொள்ளையர்களுக்கு தலா 7 ஆண்டு சிறைத் தண்டனை வழங்கி மும்பை செசன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. கடந்த 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தாய்லாந்து நாட்டிற்குச் சொந்தமான வணிகக் கப்பலை சோமாலிய நாட்டு கடற்கொள் ளையர்கள் கடத்தினர். மேலும் அதில் இருந்த 24 தாய்லாந்து நாட்டு சிப்பந்திகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தனர்.

கடத்தப்பட்ட கப்பல் இந்திய கடல் எல்லைக்குள் இருப்பதாக இந்தியக் கடற்படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து கடத்தப்பட்ட வணிகக் கப்பலை இந்தியக் கடற்படையினர் திர், சமர் என்ற 2 கப்பல்களில் சென்று சுற்றி வளைத் தனர். பின்னர் தாய்லாந்து நாட்டினரின் கப்பலுக்குள் அதிரடியாக நுழைந்து சோமாலியக் கடற்கொள்ளையர்கள் 28 பேரை அதிரடியாகக் கைது செய்தனர். மேலும் அதில் இருந்த பணயக் கைதிகளை பத்திரமாக மீட்டெடுத்தனர்.

இதன் பின்னர் கைது செய்யப்பட்ட கடற்கொள்ளையர்கள் மும்பை எல்லோ கேட் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் அவர்கள் மீது கொலை முயற்சி, ஆள்கடத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கு மீதான விசாரணை மும்பை செசன்ஸ் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கு விசாரணையின் போது கொள்ளையர்களில் ஒருவர் உயிரிழந்தார். இந்தநிலையில் வழக்கு விசாரணை நிறைவடைந்து தீர்ப்புக் கூறப்பட்டது.

இதில், மீதமுள்ள 27 கடற்கொள்ளையர்களுக்கு தலா 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி செசன்ஸ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது

# சசி தலைமையில் இருப்பதே உண்மையான அ.தி.மு.கவாம்

## சுப்பிரமணியன் சுவாமி

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலா தலைமையின் கீழ் உள்ளதுதான் உண்மையான அ.தி.மு.க. என பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னை விமான நிலையத்தில் நேற்று அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், அ.தி.மு.க.வின் சின்னத்துக்கு உரிமை கோரும் விவகாரத்தில் தேர்தல் ஆணையம் தவறான தீர்ப்பை அளித்துள்ளது.

அதுதான் இன்றைய குழப்பத்துக்குக் காரணம். சசிகலா தலைமையின் கீழ் உள்ளதுதான் உண்மையான அ.தி.மு.க. துணிச்சல் இருந்தால் சட்டப்பேரவையில் தி.மு.க. நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரலாம்.- என்றும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். (ப)



# உ.பியில் 30 குழந்தைகள் உயிரிழப்பு: யோகி பதவி விலக காங். வலியுறுத்தல்

உத்தரப் பிரதேசத்தில் மூளை யழற்சி நோயால் மூன்று நாள்களில் 35 இற்கும் மேற்பட்ட குழந்தைகள் மரணமடைந்தமைக்கு பொறுப்பேற்று முதல்வர் ஆதித்யாநாத் ஆகியோர் பதவிவிலக வேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேசம் மாநிலம் கோரக்பூர் மாவட்டத்தில் உள்ள பாபா ராகவ்தாஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூளையழற்சி நோய்க்காக சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருந்த குழந்தைகளில் ஒட்ஸிசன் பற்றாக்குறை



யால் மூன்று நாள்களில் 35 குழந்தைகள் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து ஐந்து நாள்களில் 60 இற்கும் அதிகமான குழந்தைகள் பலியாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சுகாதார அமைச்சர் தலைமையில் உயர்மட்ட விசாரணைக்கு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில், இந்த மரணங்களுக்கு தார்மீக பொறுப்பேற்று உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யாநாத் மற்றும் மாநில சுகாதார அமைச்சர் ஆகியோர் பதவி விலக வேண்டுமென காங்கிரஸ் கட்சி செய்தித் தொடர்பாளர் மனிஷ் திவாரி தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# நேபாளத்தில் மண்சரிவு: 36 பேர் பரிதாபச் சாவு!





காத்மண்டு, ஓக. 14

நேபாளத்தில் தொடர் மழையால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 36 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்; 12 பேர் காணாமல் போயுள்ளனர்.

நேபாளத்தில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்தும் மழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாகப் பல மாவட்டங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. வெள்ள நீர் அரித்துச் சென்றமையால் பல இடங்களில் மண்சரிவு ஏற்பட்டது. இதனால், தாழ்வான பகுதிகளில் வசித்து வந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இங்குள்ள ஜாப்பா, மோராங், சன்சாரி, சப்ட்டாரி, சிராஹா, ரவுட்டாஹட், பன்க்கே, பார்டியா, டாங் ஆகிய மாவட்டங்களில் வெள்ளநீர் அதிகமாகச் சூழ்ந்துள்ளது. மோராங் மாவட்டத்தில் உள்ள பிராட்நகர் விமான நிலையத்தை வெள்ளம் சூழ்ந்துள்ளமையால் விமான நிலையம் மூடப்பட்டுள்ளது என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ச)

## இந்தோனேஷிய சுமத்ரா தீவில் நிலநடுக்கம்!

ஜகார்த்தா, ஓக. 14

இந்தோனேஷியாவின் சுமத்திராத்தீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நிலநடுக்கம்ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 6.5 ஆகப் பதிவானது.

சுமத்திராத் தீவுக்கு மேற்கே 81 கிலோ மீற்றர் தொலைவில் கடலுக்கு அடியில் சுமார் 67 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருக்கிறது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தின் பாதிப்புக்கள் தொடர்பில் இதுவரை தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

நிலநடுக்கம் அதிகம் ஏற்படும் பசுபிக் நெருப்பு வளையத்தில் இந்தோனேஷியா அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வடகொரிய ஏவுகணை விவகாரம்: நிலைமையை மோசமாக்காதீர்!

### அமெரிக்காவிடம் சீனா கோரிக்கை



வடகொரிய விவகாரத்தில் நிலைமையை மோசமாக்கிவிட வேண்டாம் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பிடம் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தொலைபேசி மூலம் கேட்டுக் கொண்டார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பதற்ற நிலைமை வலுப்பெற்று வரும்நிலையில், தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் செயற்பாடுகளையும் தவிர்த்துக்கொண்டு அமைதியைக் கடைப் பிடிக்குமாறு சீன ஜனா திபதி கோரிக்கை விடுத்துள்ளார். கண்டம் விட்டுக் கண்டம் பாயும் இரண்டு ஏவுகணைகளை கடந்த ஜூலை மாதம் வடகொரியாபரிசோதித்திருந்தது.

இதிலிருந்து வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல் நிலைமை வலுப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு: 17 பேர் உடல் சிதறி உயிரிழப்பு

இஸ்லாமாபாத், ஓக. 14

பாகிஸ்தான் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள பஸ் நிறுத்தம் ஒன்றுக்கு அருகில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் சிக்கி, 17 பொதுமக்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள குவெட்டா நகரில் அமைந்துள்ள இந்த பஸ் நிறுத்தம், மிகவும் பாதுகாப்பான பகுதி ஆகும். இந்த நிலையிலேயே இங்கு குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது.



இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கி 30 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளமையால் பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இது தற்கொலைப் படைத் தாக்குதலா அல்லது வேறு வகையான தாக்குதலா என்பது தொடர்பில் விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன என அந்த மாகாண உள்துறை அமைச்சர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

பலுசிஸ்தான் மாகாணத்தில் ஏற்கனவே இது போல பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சீனாவில் தொடர் மழை; 360 விமான சேவைகள் ரத்து!





பீஜிங், ஓக. 14

சீனாவின் தலைநகர் பீஜிங் உட்பட பல்வேறு பகுதிகளில் இடி மின்னலுடன் கனமழை பெய்து வருகிறது. இதனால், நேற்றுமுன்தினம் சனிக்கிழமை 360 விமான சேவைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

பீஜிங் சர்வதேச விமான நிலையம் உட்பட ஷாங்காய், நான்ஜிங், ஹாங்சோவ் ஆகிய விமான நிலையங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால், தலைநகரை ஒட்டியுள்ள பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மலைப்பகுதிகளில் மிகப் பெரிய அளவில் மழை பெய்கின்றமையால் மண்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது என வானிலை மையம் எச்சரித்துள்ளது. இதனால், சுற்றுலாப் பகுதிகள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. (ச)

## வால் நட்சத்திரங்கள் பூமியைத் தாக்கும்!

### நாசா எச்சரிக்கை

சூரிய மண்டலத்தின் வெளிப்புறத்தில் 7 மடங்கு மிகப்பெரிய வால் நட்சத்திரங்கள் உள்ளன. அவை ஒரு நாள் பூமியை அழிக்கும் என நாசா எச்சரிக்கை விடுத்துள்ளது.

விண்வெளி ஆய்வியல் விஞ்ஞானிகள் நாசாவின் விண்கலத்தில் இருந்து வால் நட்சத்திரங்களை ஆய்வு செய்துவருகின்றனர். இந்த ஆய்வைத் தொடர்ந்து அவர்கள் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

சூரிய மண்டலத்துக்கு அப்பால் சில வால் நட்சத்திரங்கள் உள்ளன. இவை சூரியனில் இருந்து 186 பில்லியன் மைல் தூரத்துக்கு அப்பால் உள்ளன. இருப்பினும், வால் நட்சத்திரங்கள் ஒவ்வொரு 200 ஆண்டுகளுக்கும் மேலாக சூரியனைக் கடந்து செல்லும். இவற்றை ஆய்வு செய்வது கடினமாகும்.

காலைக்கதிர் Kalaikkathir



# மக்களுக்காக மீண்டும் களமிறங்குகிறார் ஓய்வு பெற்ற திலகரத்னே டில்ஷான்

கடந்த ஆண்டு சர்வதேச கிரிக் கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற இலங்கை நட்சத்திர வீரர் திலகரத்னே டில்ஷான், மீண்டும் இலங்கை அணிக் காக களமிறங்கி விளையாட வுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை அணியில் 17 ஆண்டு களாக விளையாடி வந்த முன்னணி வீரர் தில கரத்னே டில்ஷான், 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஓய்வை அறி வித்து சர்வதேச கிரிக்கெட் போட்டி யிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்நிலையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக் காக இலங்கை, உலக அணிகள் மோதும் போட்டி நடத்தப்படவுள் ளது.



இந்த போட்டியில் இலங்கை அணியில் ஓய்வு பெற்ற இலங்கை நட்சத்திர வீரர் தில கரத்னே டில்ஷான் களமிறங்கி விளையாடு வார் எனத் தகவல் கள் வெளியா கியுள்ளன.

## அனைத்துத் தகுதியும் டோனிக்கு உள்ளது; ஆஸி. வீரர் கருத்து



2019இல் நடக்கவிருக்கும் ஐ.சி.சி உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கேற்க டோனிக்கு அனைத்துத் தகுதி களும் உள்ளன என மைக்கேல் ஹசி கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியா அணி யின் முன்னாள் வீரரான மைக் கேல் ஹசி ஐ.பி.எல். போட்டி களில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காகவிளையாடியுள்ளார்.

சூதாட்டப் புகார் தடைக்கு பின்னர் இரண்டாண்டு கழித்து சென்னை அணி அடுத்த வரு டம் களமிறங் கவுள்ளது.

இதுகுறித்து ஹசி கூறுகை யில் -

சென்னை அணி வீரர்கள் வெவ்வேறு அணிகளுக்கு சென்று விட்ட நிலையில் அணியை மீண்டும் கட்டி எழுப்புவது சவாலான விடயம் தான்.

ஆனால் சென்னை அணி மீண்டும் எழும்; அந்த அணி யின் பயிற்சியாளர் பதவி கிடைத்தால் மகிழ்ச் சியாக ஏற்பேன்.- எனக் கூறி யுள்ளார்.

மேலும், டோனியுடன் நல்ல நட்பு இருப்பதாக கூறிய ஹசி, அடுத்த உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்கேற்க டோனிக்கு அனைத்துத் தகுதி களும் இருக்கின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

# வேகப்பந்துக்குச் சாதகமான ஆடுகளங்களை அமைக்கவேண்டும் - சமிந்தவாஸ்



இலங்கைக் கிரிக்கெட் (SLC) உள் நாட்டுப் போட்டிகளில் 2016/17 இல் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய 15 பந்துவீச்சாளர்களில் 14 பேர் சுழல்பந்து வீச்சாளர்களாவர். அண்மைய உள்ளூர் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய மலிந்த புஷ்பகுமார மற்றும் லக்ஷன் சந்தகன், இந்தியாவுக்கு எதிரான பல்லேகல டெஸ்ட் போட்டியின் முதல் நாளில் இலங்கை அணி 6 விக்கெட்டுகளை வீழ்த்தி பதிலடி கொடுக்க உதவினர்.

பந்துவீச்சாளர்கள் நன்றாகப் பந்து வீசினார்கள். முதல்நாளில் இந்திய அணியை எம்மால் 320 ஓட்டங்களுக்கு மட்டுப்படுத்த முடிந்தது. இறுதி நேரத்தில் விஷ்வா இரண்டு சுற்று ஓவர்களை வீசிய முறை நன்றாக இருந்தது என்று இலங்கை வேகப்பந்து பயிற்சியாளர் சமிந்த வாஸ் முதல் நாள் பல்லேகல டெஸ்ட் ஆட் டத்தின் பின் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாடசாலைக் கிரிக்கெட் சங்கம் 15-19 வயது மட்டப் போட்டிகளில் முதல் 10 ஓவர்களையும் வேகப்பந்து வீச்சாளர்கள் வீசவேண்டும் என்று புதிய விதிமுறை ஒன்றை அறிமுகம் செய்தது. இலங்கை கிரிக்கெட்டும் இதே விதி முறையை 23 வயதுப் போட்டிகளில் அமுல் படுத்தியது. எனினும் உள்நாட்டுப் போட்டிகளில் இவ்வாறு வேகப்பந்து வீச்சாளர்கள் பயன்படுத்தப்படுவதில்லை.

முதல்தர கிரிக்கெட் செயற்படும் முறை பற்றி எம்மால் திருப்தி அடைய முடியாதிருக்கின்றது. வேகப்பந்து வீச்சா ளர்களுக்கு உதவக் கூடிய முறையில் கிரிக்கெட்டை மாற்ற வேண்டிய தேவை இருக்கின்றது. முதல்தர கிரிக்கெட்டுக்கு என்ன ஆனது என்பது பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். எவ்வளவு பேசினாலும் இந்த விடயத்தில் முன்னேற்றம் காணமுடி யாது. எமது கிரிக்கெட்டை மேம்படுத்த விரும்பினால் எம்மிடம் இருக்கும் வேகப் பந்து வீச்சாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். எமது கிரிக் கெட்டுக்கு நன்மையைச் செய்ய விரும்பி னால் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு பொருத்தமான ஆடுகளங்களை உருவாக்க வேண்டும். அவ்வாறு நாம் செய்தால் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற் படுவார்கள் என்று வாஸ் குறிப்பிட்டுள்ளார்.

போட்டி ஆரம்பிக்கப்படும் வரை ஆடுகளத்தில் அதிக புற்கள் இருந்தன. இலங்கையில் வேகப்பந்து வீச்சாளர் களுக்குச் சாதகமான ஆடுகளங்களில் ஒன்றாக பல்லேகல ஆடுகளம் இருந்த போதும் பகல்போசன இடைவேளைக்குப் பின்னர் அங்கு பந்து சுழல ஆரம்பித்தது. ஆடுகளம் துடுப்பாட்டத்திற்கு அதிகம் சாதகம் கொண்டதாக உள்ளது. பந்து எப்படி செயற்படுகிறது துடுப்பாட்ட வீரர்கள் எப்படி ஓட்டங்களைக் குவிக்கிறார் கள் என்பதனை நாம் கண்டோம். இது தனித்துவமான ஒரு கண்டி ஆடுகளம்.

அண்மைய காலத்தில் இலங்கை அணியில் போட்டிகளுக்கு இடையில் வேகப்பந்து வீச்சாளர்கள் காயத்திற்கு உள்ளாகின்றனர். இது உடற்தகுதி பிரச்சி னையா அல்லது உறுதியற்ற நிலையா? என்று வேகப் பந்துவீச்சாளர்களில் ஒருவரான வாஸிடம் தொடுத்த கேள்விக்கு.

உண்மையில் இது ஒரு வித்தியாசமான உடல் அமைப்பாகும். ஒரு வேகப்பந்து வீச்சாளர் என்ற வகையில் - இப்போதைய சில இளைஞர்கள் போன்றே நானும் வலைப் பயிற்சிகள் மற்றும் போட்டிகளில் என வெவ்வேறு முறைகளில் பந்துவீசியே சமாளித்தேன்.

அவர்களது உடல் அமைப்பு பற்றித் தெரிந்து கொண்டு வித்தியாசமான வழிகளில் அணுகினாலேயே அவர்களை எதிர்காலத்துக்கு எடுத்துச் செல்ல முடியும் என்று வாஸ் தெரிவித்துள்ளார். வாஸ் தனது 15 வருடகால கிரிக்கெட் வாழ்வில் 750 இற்கும் அதிகமான சர்வதேச விக் கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கடைசி போட்டியில் உசைன் போல்ட் காயம் - ரசிகர்கள் ஏமாற்றம்

உசேன் போல்ட் கலந்து கொண்ட கடைசி உலக சம்பி யன்ஷிப்போட்டியில் அவருக்கு எதிர்பாராத விதமாக காயம் ஏற்பட்டு ஓட முடியாமல் ஓடுபாதையிலேயே விழுந்தார்.

லண்டனில் உலகசம்பியன் ஷிப் 2017 என்ற தடகள போட்டிகள் நடந்து வருகிறது. இப்போட்டியில் ஜமைக்கா நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ் பெற்ற தடகள வீரர் உசேன் போல்ட் 4X100 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டார். இப்போட்டிதான் இவர் கலந்து கொள்ளும் கடைசி தடகள போட்டி என அறிவிக்கப்பட் டிருந்தது.

இதையடுத்து உசேன் போல்ட் பங்கேற்கும் இந்தப் போட்டி பலத்த எதிர்பார்ப்பை உருவாக்கியது. உசேன்போல்ட் டின் கடைசிப் போட்டி என்ப தால் அரங்கம் முழுவதும் அவ ரது ரசிகர்கள் கூடியிருந் தனர்.

இந்நிலையில் போட்டியின் போது 4ஆவது ஆளாக ஓடிய




உசேன் போல்ட் தனது பாணி யில் கடைசி நேரத்தில் வேக மெடுத்து தனக்கு முன் ஓடிய வரை முந்தும் முயற்சியின் போது எதிர்பாராத விதமாக அவரது இடது தொடையில் பலத்த தசைச் சிதைவு ஏற்பட் டது. இதனால் அவர் வலியில் ஓட முடியாமல் ஓடுபாதையி லேயே விழுந்தார்.

இதைக்கண்டதும் அரங்கமே அதிர்ச்சியில் உறைந்தது. இதையடுத்து உசேன் போல்ட் டிற்கு முதலுதவி செய்யும் குழு அவருக்கு தொடையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருக் கலாம் எனக்கூறியது. அவருக்கு சக்கர நாற்காலி கொண்டு வரப்பட்டது. எனினும் அவர் கால் வலியுடன் நடந்தே சென் றார்.

இப்போட்டியில் பிரிட்டன் அணி முதலிடம் பெற்றது.

உலகம் முழுவதும் உள்ள ரசிகர்களால் பெரிதும் எதிர் பார்க்கப்பட்ட இந்த போட்டியில் உசேன் போல்ட் காயமடைந் தமை ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதன் மூலம் 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டப் பந்தயங் களில் உலக சாதனை படைத்த உசேன் போல்ட் 14 உலக சாம் பியன் பதக்கங்களையும், 8 ஒலிம்பிக் பதக்கங்களையும் சுவீ கரித்து தனது சர்வதேச தடகள விளையாட்டு போட்டிகளில் இருந்து விடை பெறுகிறார்.

கடந்த 5ஆம் திகதி நடை பெற்ற 100மீற்றர் ஓட் டப்பந்தயத்தில் அமெரிக்க வீரர்கள் கட்லின் மற்றும் கிறிஸ்டியன் கோல்மேன் ஆகியோர் முதல் இரண்டு இடங்களைப் பிடித்தனர். உசைன் போல்ட் மூன்றாமிடம் பிடித்து ஏமாற்றம் அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## பல்லேகல டெஸ்ட்:

# 135 ஓட்டங்களுடன் சுருண்டது இலங்கை

### ‘பொலொ ஒன்’ கொடுத்தது இந்தியா

பல்லேகலயில் நடைபெற்று வரும் இலங்கை அணிக்கெதிரான கடைசி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்சில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 487 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பல்லேகலயில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் இந்திய அணி ஆறு விக்கெட் இழப்பிற்கு 329 ஓட்டங்களை எடுத்தது. தவான் 119 ஓட்டங்களுடனும் ராகுல் 85 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். சகா 13 ஓட்டங்களுடனும், ஹர்திக் பண்டையா ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்நிலையில், இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து களமிறங்கிய சகா 16 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் களமிறங்கிய குல்திப் யாதவ் 26 ஓட்டங்களுடனும், முகமது சமி 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இதன்மூலம் இரண்டாம் நாள் உணவு இடைவேளைவரை இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட்களை இழந்து 487 ஓட்டங்களைக் குவித்தது.

உணவு இடைவேளைக்கு முன்னர் அதிரடியாக விளையாடினார் ஹர்திக் பண்டையா. இடைவேளைக்குப் பின்னர் இரண்டு பந்துகளை சந்தித்து பெரேராவிடம் பந்தைப் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார். மொத்தம் 96 பந்துகளில் 108 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இதுவே டெஸ்ட் கிரிக்கெட்டில் அவரது அதிகபட்ச ஓட்டங்கள். உமேஷ் யாதவ் 3 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார்.



இலங்கை அணி பந்துவீச்சில் சந்தகன் ஐந்து விக்கெட்டுகளையும் மலிந்த புஷ்பகுமார 3 விக்கெட்டுகளையும் பெர்னாண்டோ 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இதன்மூலம் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 487 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

இலங்கை அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 487 ஓட்டங்களைக் குவித்துள்ள நிலையில் தனது முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடும் இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்திய அணித்தலைவர் விராட்கோஹ்லி பொலோ ஒன் கொடுக்க இலங்கை அணி தன்னுடைய இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடி வருகின்றது.

நேற்றைய ஆட்ட நேர முடிவில் இலங்கை அணி தனது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை இழந்து 19 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## இந்தியா குறித்து சர்ச்சைக்குரிய கருத்து - மன்னிப்புக் கேட்ட அமெரிக்க கூடைப் பந்தாட்ட வீரர்




இந்தியா குறித்து சர்ச்சைக்குரிய கருத்தை தெரிவித்ததற்காக தாம் வருந்துகிறார் என அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கூடைப்பந்தாட்ட வீரர் கெவின் துரந்த் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல கூடைப்பந்தாட்ட வீரரான கெவின் துரந்த் கடந்த மாதம் இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார், இந்தப் பயணம் குறித்து அமெரிக்காவில் பேட்டியளித்த அவர், அறிவு மற்றும் அனுபவத்தில் இந்தியா 20 ஆண்டுகள் பின்தங்கியிருக்கின்றது எனத் தெரிவித்திருந்தார்.

எங்கு பார்த்தாலும் மக்கள் கூட்டம், வாகன நெருக்கடி இந்தியாவில் இருப்பதாகவும், தகுதியே இல்லாத பலர் கூடைப்பந்தாட்ட விளையாட்டைக் கற்க விரும்புகின்றனர் எனவும் அவர் கூறியிருந்தார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில், தேவையற்ற விஷயங்களைத் தாம் பேசிவிட்டார் என அதற்காக வருத்தம் தெரிவிக்கிறார் எனவும் துரந்த் தனது ட்விட்டரில் பதிவிட்டுள்ளார்.



## சங்காவின் சாதனையை சமன்செய்த ராகுல்

இந்திய அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான ராகுல் தொடர்ச்சியாக 7 முறை அரைச்சதம் கடந்து குமார் சங்கக்கார, அன்டி பிளவர் ஆகியோரின் சாதனையைச் சமன்செய்துள்ளார்.

இலங்கை அணிக்கு எதிராக பல்லேகலயில் இடம் பெற்று வரும் 3 ஆவது டெஸ்ட் போட்டியில் அரைச் சதம் கடந்ததன் மூலம் இந்தச் சாதனையை சமன்செய்தார்.

இப் போட்டியில் தவானு டன் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கிய ராகுல் 85 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

நேற்றைய போட்டியில் அரைச்சதம் கடந்த ராகுல் டெஸ்ட் போட்டிகளில் தனது 9 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். அதேவேளை, அவர் தொடர்ச்சியான 7 ஆவது அரைச் சதத்தைப் பூர்த்திசெய்து, தொடர்ச்சியாக அதிக அரைச் சதங்களை கடந்தவர்கள் வரிசையில் ஏனைய வீரர்களுடன் சாதனையை சமன் செய்தார்.

இதேவேளை, கிரிக்கெட் ஜாம்பவான்களான இலங்கை அணியின் குமார் சங்ககார, மேற்கிந்தியத் தீவுகள் அணியின் எவர்ட்டன் வீக்ஸ், சிவ்நரைன் சந்தர்போல், ஆஸ்திரேலிய அணியின் கிறிஸ் ரொஜர்ஸ் மற்றும் ஸிம்பாவே அணியின் அன்டி பிளவர் ஆகியோர் தொடர்ச்சியாக 7 அரைச் சதங்களைக் கடந்தமையே சாதனையாக இருந்து வருகின்றது. இந்நிலையில் இலங்கைக்கு எதிரான இன்றைய போட்டியில் 85 ஓட்டங்களைப்பெற்றதன் மூலம் ராகுலும் 7 அரைச்சதங்களைப் பெற்றவர்கள் வரிசையில் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஸ்டெயின் பந்து வீசுகின்றமை கடினம் – டு பிளிசிஸ்



ஸ்டெயின் காயத்தில் இருந்து மீண்டு வந்து டெஸ்ட் போட்டியில் இடம்பிடித்தால், 150 கி.மீ. வேகத்தில் பந்து வீசுகின்றமை கடினம் என்று டு பிளிசிஸ் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின். சர்வதேச அளவில் அதிவேக பந்து வீச்சாளராகத் திகழ்ந்து வந்தார். ஆஸ்திரேலியாவில் நடைபெற்றடெஸ்ட்தொடரின்போது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. அதற்காக அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இதனால்கடந்த6மாதங்களுக்கு மேல் ஓய்வில் இருந்து வருகின்றார்.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் ஸ்டெயின் இடம்பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், காயம் குணமடையாததால் இங்கிலாந்து தொடருக்கு தயார் ஆக முடியாது என்று ஸ்டெயின் தெரிவித்திருந்தார். இந்தத் தொடரில் தென்னாபிரிக்கா தொடரை 1:3 என இழந்தது.

இந்நிலையில், தென்னாபிரிக்கா டெஸ்ட் அணி தலைவர் டு பிளிசிஸ், அந்நாட்டின் கிரிக்கெட் இதழ் ஒன்றுக்கு பேட்டியளித்தார். அப் போது ஸ்டெயின் டெஸ்ட் கிரிக்கெட்டிற்குத் திரும்பிய பிறகு அவரால் 145 கி.மீ. வேகத்தில் பந்து வீசுகின்றமை கடினம் என்று கூறியுள்ளார்.

ஸ்டெயின் குறித்து டு பிளிசிஸ் கூறுகையில் ‘சுஸ்டெயின் காயத்தில் இருந்து குணமடைந்து டெஸ்ட் போட்டியில் விளையாடும்போது, 145 முதல் 150 கி.மீ. வேகத்தில் மீண்டும் பந்து வீசுகின்றமை கடினம். ஆனால், அவர் மீண்டும் களத்திற்குதிரும்பி அந்த வேகத்தில் வீசுவார் என்று நான் நம்புகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## மேரிலாண்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாநிலத்துக்கான ஆளுநர் தேர்தலில் தாம் குதிக்கின்றார் என அறிவித்துள்ளார்.

ஜனநாயக் கட்சியின் வேட்பாளர் நியமனத்தைத் தாம் எதிர்பார்த்திருக்கின்றார் என அவர் அறிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் குதித்திருக்கும்முதல்பெண்மணிஇவர். அவர் தமது பிரசாரத்தை செப்டெம்பர்19ஆம்திகதிஉத்தியோக பூர்வமாகஆரம்பித்திருக்கின்றார்.

கிறிஸ் விக்னராஜா 9 மாதக் குழந்தையாக இருந்த போது, இலங்கையில் வெடித்த யுத்தத்துக்குப்பயந்து அவரது பெற்றோர் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்திருந்தனர்.

ஒபாமாவின் ஆட்சிக் காலத்தில் அவரது துணைவியார் மிச்செல் ஒபாமாவின் கொள்கை இயக்குநராகவும், கிலாரி கிளின்டன் மற்றும் ஜோன் கெரி ஆகியோர்அமெரிக்கவெளிவிவகார அமைச்சர்களாக இருந்த போது அவர்களின் சிரேஷ்ட ஆலோசகராகவும் கடமையாற்றியவர் கிறிஸ் விக்னராஜா.

மிச்செல் ஒபாமாவின் பல பொது வேலைத் திட்டங்களை இவரே முன்னெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிறிஸ் விக்னராஜாவின் துணைவர் கொலின் ஓ' மாரா. கடந்த ஜூன் மாதம்தான் அவர்கள் ஒரு பெண் குழந்தைக்குப் பெற்றோர்களாகியிருந்தனர். (உ)

## பாவத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

முன்னாள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் தந்தையின் நினைவாக நேற்று தம் புள்ளயில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தநிகழ்வில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இதனைக் கூறி யுள்ளார்.

"நாடு தற்பொழுது பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. அனுராதபுர மக்கள் தற்பொழுது தாமரைப் பூவை உணவாக உட்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏழைகளின் வயிற்றில் அடிக்கும் இந்த அரசாங்கத்தில் இருந்து விலகி பாவத்துக்கு பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள்." – சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடம் அவர் இவ்வாறு மேலும் கேட்டுக் கொண்டார். (உ)

## இனியும்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புதுக்குளத்தில் நேற்று தங்கம்மா முதியோர்இல்லம்கலாநிதிமுருகர் குணசிங்கத்தால்அமைக்கப்பட்டு திறந்துவைக்கும் நிகழ்விலும் 'இலங்கைதமிழர்'நூல்வெளியீட்டு நிகழ்விலும் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு கருத்து தெரிவித்த அவர்–

2013ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்துக்கான தேர்தலை சந்தித்தோம். மக்களுடைய பாரிய பங்களிப்போடு ஒரு சபையை அமைத்தோம்.எங்கள்அபிவிருத்தி நடவடிக்கைகளோடு உரிமைக்கான இணைந்த பயணத்தையும்அதனூடாகக்கொண்டுசெல்கின்றோம்.

2013இல் முதலமைச்சர் தலைமையில், மேலும் நான்கு அமைச்சர்களை உள்ளடக்கி ஓர் அமைச்சர் வாரியத்தை அமைத்தோம். அதுபோன்றசிறந்தொரு அமைச்சர் வாரியத்தை இனிப் பெறுவோமா? அது போன்ற பெறுமதியான அமைச்சர் குழுவை முதலமைச்சரால் மீண்டும்உருவாக்கிக்கொள்ளமுடியுமா என்ற கேள்விகள் எல்லோர் மத்தியிலும் உள்ளது. – என்றார். (உ)

## சட்டமா அதிபர் திணைக்களம் குறித்து பிரதமருடன் ஐ.தே.கவினர் பேசுவர்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பாக எதிர்வரும்வாரத்தில்பிரதமருடன் கலந்தாலோசிக்க ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

தற்போதைய நிலையில் கடந்தஅரசாங்கத்தின்முக்கியஸ்தர்களுக்கு எதிரான வழக்குகள் கிடப்பில் போடப்பட்டுள்ளமையுடன், ஐக்கிய தேசியக்கட்சியுடன் தொடர்புடையவர்களுக்குஎதிரான வழக்குகளில்மட்டும்ஒரு இறுக்கமான போக்கு கடைப்பிடிக்கப்படுகின்றது.

சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் இந்த விடயத்தில் இரட்டைப் போக்கைக் கடைப்பிடிக்கின்றனர் என ஐக்கிய தேசியக்கட்சியின்நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியுடன் உள்ளனர்.

## ராஜபக்ஷக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கும்மாளமிட்டுக் கொண்டாடுகின்றனர் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டதாம்.

அந்தவிடயம்அக்கூட்டத்தில் அதிகம் பேசப்பட்டது.

சு.கட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையை ஏற்காமல் மஹிந்த ராஜபக்ஷக்குப் பின்னால்அணிதிரண்டோரேகூட்டு எதிரணியை அமைத்துள்ளனர். அவர்கள் ரவி கருணநாயக்காவின் இராஜினாமாவைத்தங்களின் அரசியல் வெற்றியாகக் கொண்டாடுகின்றனர் என்ற தகவல்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவை சினத்துக்கு உள்ளாக்கியதாம்.

அவர்களின் கொண்டாட்டம் குறுகிய காலத்துக்குத்தான் என்பதைக் குறிக்கும் விதத்தில் "அவர்களுக்கு அடுத்த வாரம் என்ன நடக்கப்போகின்றது என்பது எனக்குத் தான் தெரியும்." – என்று குறிப்பிட்டாராம்.

ராஜபக்ஷவுக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் எதிராக நடக்கும் உயர் விவகார வழக்குகளின் தொடர்பிலேயே ஜனாதிபதி இப்படி சூசகமாகக் கோடி காட்டியிருக்கின்றார் என்று ஜனாதிபதிக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறியுள்ளன.

மேற்படி உயர்மட்ட விசாரணைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பை ஜனாதிபதி அண்மையில்தான்நேரடியாகத் தனக்குக் கீழ் கொண்டு வந்தார் என்பதையும் அந்த வட்டாரங்கள் சுட்டிகாட்டியுள்ளன.

இதேசமயம் –

ரவிகருணாநாயக்கா இராஜினாமாச் செய்ய வேண்டிய நிலைமை அரசுக்கு ஏற்பட்டிருக்கும் பின்னடைவைச் சமாளித்துச் சமன் செய்வதற்காக அரசு தன்னையோ அல்லது தனது குடும்பத்தவர்களையோ கைது செய்யலாம் என்றும் –

கைது செய்பவரை நீதிமன்றில்நிறுத்தி, ஒருபிரசாரநடவடிக்கைத் திட்டத்தை அரசு முன்னெடுக்கலாம் என்றும் –

கூட்டு எதிரணி அது குறித்து முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றும் –

மஹிந்தராஜபக்ஷவேநேரடியாகக்கூட்டு எதிரணியை உஷார் படுத்தியுள்ளார்என்றும்–செய்திகள் வெளியாகியுள்ளன. (உ)

## சம்பந்தனுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த வாரம் கொழும்பில் ஒரு நூல் வெளியீட்டு விழாவில் பங்குபற்றிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும்அங்கு அந்நியோன்னியமாகப் பழகினர். ஒருவரை ஒருவர்மதித்துகருத்துவெளியிட்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் இணைந்து செயற்படத்தயார்எனசம்பந்தன் அங்கு பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

"எமது நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் சம உரிமை கொண்ட ஒரே மக்களாவர். இந்த நாடு என்றும் பிளவுபடக் கூடாது. எமது பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும். எனவே அதனைப் புரிந்து கொண்டு முன்னாள் ஜனாதிபதியும்நானும் இணைந்து ஆட்சி புரிய வேண்டும் என்று விரும்புகிறேன்." –என சம்பந்தன் அங்கு கூறியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கருத்தையே நாமல் ராஜபக்ஷ எம்.பி. தனது உத்தியோக பூர்வ 'டுவிட்டர்' தளத்திலே தமிழில் வரவேற்றிருக்கின்றார்.

"கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இந்த நிலைப்பாட்டை வரவேற்கிறேன்." என்றும் –

"ஒன்றுபட்ட இலங்கைக்குள் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ராஜபக்ஷ அன்றும் தயாராக இருந்தார். இன்றும் தயாராக இருக்கிறார்." – என்றும் –

நாமல் தெரிவித்துள்ளார்.

இருதரப்பு ஊடாட்டத்துக்கான பூர்வாங்க முயற்சிகள் வேறுதரப்புகள் ஊடாகவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் நம்பகரமாக அறிய வந்தது. (உ)

## தாமாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டிருந்த போதும் –

அவ்வாறு தமது பதவியைத் தாமாக இராஜினாமாச் செய்யும் எண்ணம் அமைச்சர் டெனீஸ்வரனுக்கு நேற்றிரவு வரை கிஞ்சித்தும் இருக்கவில்லை என்பதை உறுதியாக அறிய முடிந்தது.

"விருப்பமானால் முதல்வர் என்னை அமைச்சர் பதவியிலிருந்து நீக்கட்டும். ரெலோ கட்சித் தலைமைப் பீடம் என்னைக் கட்சியிலிருந்து வெளியேற்ற முயற்சிக்கட்டும். என்னை செய்வது என்பது எனக்குத் தெரியும்." – என்ற கருத்தில் டெனீஸ்வரன் இருக்கின்றார் என அறிய வந்தது.

இன்று காலை அமைச்சர் டெனீஸ்வரன் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றைக் கூட்டியிருக்கின்றார்.

அந்த மாநாட்டில் வைத்து, கட்சியின் கட்டுப்பாட்டை மதித்து, கட்சியின்வழிகாட்டலுக்கு இணங்கத் தாம் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்கின்றார் என டெனீஸ்வரன் அறிவிப்பார் என்று ரெலோ தலைமைப்பீடம் நேற்றிரவுவரைநம்பிக்கையுடன் இருந்தமையை அறிய முடிந்தது.

ஆனால், டெனீஸ்வரன் அவ்வாறு இராஜிநாமாச் செய்யும் முடிவில் இருக்கவேயில்லை என்பதை இச்செய்தி அச்சுக்குப் போகும் சமயத்திலும் உறுதி செய்ய முடிந்தது.

தாம் இராஜிநாமாச் செய்ய மறுப்பதற்கான காரணத்தையே இன்றைய செய்தியாளர் மாநாட்டில் அவர் அறிவிப்பார் என்பதையும் ஊர்ஜிதப்படுத்தக் கூடியதாகவும் இருந்தது.

தமக்கு எதிராக கூறப்படும் ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்களை நிரூபித்துக் காட்டும்படி முதல்வருக்கும், ஏனையோருக்கும்அவர் பகிரங்க சவால் இன்று விடுப்பார் எனவும் அவருடன் தொடர்புடைய வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது. (உ)

## குழம்பிப்...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)
டங்களுக்கு உதவும்திட்டமொன்றையும் அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. இனி மேல் அதன் நிலைமை என்னவாகும் என்று தெரியவில்லை. அவ் ஒப்பந்தத்தை நிறைவேற்ற அவருக்கு முதலமைச்சர் இடமளிக்கவில்லை. இவ்வாறு பல நிகழ்ச்சித் திட்டங்களை அறிவோம். இத்தகையவினைத்திறன்மிக்க சேவைகளை மாகாண சபை நிறைவேற்றத் தடையாக இருந்தமைக்கு ஆதாரங்களிருக்கின்றன.

05.08.2017 அன்று முதலமைச்சர் இவ்வாறான முயற்சிகளைவிரும்பாதபுளொட்தலைவர்சித்தார்த்தன், 'முதலமைச்சர் இத்தகைய முயற்சிகளை தற்போது எடுக்க வேண்டாம்' என்று பலமுறை வற்புறுத்தியதை நினைவு கூருகின்றேன்.

### சம்பந்தனும் சேர்ந்து எடுத்த முடிவுதான் இது

அடுத்து பிறேமச்சந்திரனின் வழமையானகுற்றச்சாட்டுக்கள் போல சம்பந்தன் அமைச்சரவையில் தமிழரசுக் கட்சி ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டுமென்று கோரினார் என்றும்,அதற்குமாறாகத்தமிழரசுக் கட்சி செயற்படுவதாகவும் பொய் கூறுகிறார். டாக்டர்சத்தியலிங்கம் அமைச்சர் தன் பொறுப்பிலிருந்து விலகிஎடுத்த முடிவு சம்பந்தனுடன் ஆலோசனை நடத்தித்தான்எடுக்கப்பட்டது. அமைச்சரவையில் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இடம்பெறாமல் இருக்க முடிவெடுத்ததையும் அவர் ஆதரித்திருந்தார் என்பதையும்கூறவேண்டியதேவை ஏற்படுத் தப்பட்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சி வடக்கு மாகாண சபை அமைச்சரவையில் இடம்பெறாவிட்டாலும் முதலமைச்சரும், மாகாண சபையும் வினைத்திறனுடனும், ஊழலற்ற முறையிலும் செயலாற்ற முழுஒத்துழைப்பையும்வழங்குமென்றும், மந்திரிப் பதவிகளுக்குப் போராடாமல் தமிழின விடுதலைக்கும், அரசியல்தீர்வு ஒன்றுக்காகவும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் ஏனைய அன்றாடப் பிரச்சினைகளுக்கும் தீர்வைக் கான அனைவருடனும் ஒன்றுபட்டு உழைக்கும் தமிழரசுக் கட்சியின் அர்ப்பணம் மிகுந்த எண்ணத்தையும் பிறேமச்சந்திரன் நிராகரித்து முதலமைச்சரையும் தவறாக வழி நடத்தும் எத்தனத்தையையும்மனவருத்தத்துடன் கூறவேண்டிய நிலை வந்துவிட்டது. சுரேஷின் செய்திகளுக்குப் பதிலளிக்க விரும்பவில்லை. ஆனால்உண்மைக்கு மாறான செய்திகள் மெய்யாகி விடும் என்பதால் குறுகிய அளவில் இச் செய்தியைத் தருகின்றேன்.

இருப்பினும் தமிழரசுக் கட்சி மாகாணஉறுப்பினர்களும், தமிழரசுக் கட்சியும், மாகாண சபை வினைத்திறனுடனும், மக்கள் பயனுறும் வகையிலும் எடுக்கும் நல்ல தீர்மானங்களுக்கும், நடைமுறைகளுக்கும் ஆதரவாக இருக்கும் என்று கூறுவதுடன் தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழு விரைவில் கூடிப் பொருத்தமான தீர்மானங்களை எடுத்து மேலும் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் எனவும் திடசங்கற்பத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வட மாகாணசபையில் ஏற்பட்ட பிரச்சினைகளையே தொடர்ந்தும் அறிக்கைகளை விடுத்துக் குழப்பிக் கொண்டிராமல்ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டுமுதலமைச்சர்மாகாண சபையை நடத்திச் செல்ல இடம் விடுவது தான் இன்று பொருத்தமான செயலாகும். – என்று உள்ளது.

### ஆசிரியக் குறிப்பு

மேற்படி அறிக்கையில் சுகாதார ஒப்பந்தங்கள் தொடர்பில் இரண்டு தொகைகள் மாவை சேனாதிராசாவினால்குறிப்பிடப் பட்டுள்ளன.

ஒன்று – நெதர்லாந்துடன் செய்யப்பட்டஒப்பந்தத்தின்மூலம் '140605மில்லியனைப்பெற்றுக் கொண்டதாகும்.' – என்பது. இத்தொகை ரூபாவா அல்லது டொலராஎன்பது அறிக்கையில் இல்லை. ரூபா என்றால் இதன் பெறுமதி14 ஆயிரத்து 60 கோடியும்ஐம்பதுலட்சம்ரூபாவுமாகும்.

அடுத்தது – '70 மில்லியன் டொலர்' பற்றியது. 70 மில்லியன் டொலர் என்றால் அது இலங்கைப் பணத்தில் சுமார் 10 லட்சத்து ஐம்பதாயிரம் கோடி ரூபாவாகும். (ஆ–ர்)

## எல்லாச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சிலதரப்பினரால்மேற்கொள்ளப்பட்டு வரும் குற்றச்செயல்கள் அனைத்தையும் புலிகளின் மீது சுமத்த முடியாது. வடக்கில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் தேசியப்பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியனவல்ல. எல்லாச் சம்பவங்களுக்கும் விடுதலைப் புலிகளின் பெயரைப் பயன்படுத்துவதை நான் விரும்பவில்லை.

ஆவா குழு விடுதலைப் புலிகள் அல்லர். 12ஆயிரம்முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் ஏதேனும் தவறிழைத்தால், அதற்காக இந்த 12ஆயிரம் முன்னாள் போராளிகளும் நாளையே ஆயுதம் ஏந்திப் போராடுவார்கள் எனக் கருது வது பிழையானது.

வடக்கில் படையினர் முகாம்களுக்கு முடக்கப்படமாட்டார்கள். வெளியேவந்துபாதுகாப்புப்பணிகளை மேற்கொள்வார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர்பதவியிலிருந்துவிலகியுள்ளரவி கருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கண்டிக்கு விஜயம் செய்த ரவி கருணாநாயக்க, அஸ்கிரி பீடமகாநாயக்கரை சந்தித்துஆசி பெற்ற பின்னர் செய்தியா ளர்களிடம் கருத்து வெளியிட்டார்.

ஊடகங்களே நியாயமற்ற குற்றச்சாட்டுக்களைத் தம் மீது முன்வைத்தன எனவும் அதற்கான பிரதிபலனை அவர்கள் அனுபவிப்பார்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ரவி கருணாநாயக்க –

ஆணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள நீதிபதிகள் என்னை மிகவும் சிறப்பாக நடத்தினர். அவர்களை நான் மதிக்கின்றேன். அதில் நம்பிக்கை வைத்தே நான் ஆணைக் குழுவில் முன்னிலையாகினேன். அமைச்சுப் பதவியில் இருந்து நான் விலகியமை போன்று சிறிலங்கா வரலாற்றில் இதற்கு முன்னர் நடந்தது இல்லை.

ஆசியாவில் வேறு நாட்டில் இல்லாத ஒன்றையே நான் ஏற்படுத்தினேன்.

அதிகார கஞ்சதனத்தால் இதனைசெய்யவில்லைஎன்பது இதன்மூலமே புலப்படுகின்றது. எனது ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எனது அரசாங்கத்தை பாதுகாக்கவே நான் அவ்வாறு செய்தேன். – என அவர் குறிப்பிட்டார். (உ)

# முதலமைச்சரைச் சுற்றி சுயநல அரசியல் லாபத்துக்கு குள்ளநரிக் கூட்டம் என அமைச்சர் டெனீஸ் விசனம்!

## நிதி திரும்பும் ஆபத்து; அது நடந்தால் முதல்வரே பொறுப்பு எனவும் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக. 14

வடமாகாண முதலமைச்சரைச் சுற்றி ஒரு குள்ளநரிக் கூட்டம் சுயநல அரசியல் லாபத்திற்காக வட்டமிட்டுக் கொண்டிருக்கிறது என வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்தசில மாதங்களாக வடமாகாண சபையில் ஏற்பட்டுள்ள அசாதாரண அரசியல் சூழ்நிலையால், வட மாகாணத்திற்கு அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி திரும்பிச் செல்கின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு நிதி பயன்படுத்தப்படாமல் திரும்புமாயின் அதற்கான முழுப்பொறுப்பையும் முதலமைச்சரே ஏற்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

கடந்த சில மாதங்களாக வட மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அசாதாரண அரசியல் சூழ்நிலையினால் வட மாகாணத்திற்கு அபிவிருத்தி திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி திரும்பிச் செல்கின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு நிதி பயன்படுத்தப்படாமல் திரும்புமாயின் அதற்கான முழுப் பொறுப்பையும் முதலமைச்சரே ஏற்க வேண்டும்.

கடந்த காலங்களில் வட மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட வேலைத் திட்டத்திற்கு பயன்படுத்தப்படாமல் சில அமைச்சுக்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கிராம மட்ட அமைப்புக்களுக்குப் பணமாக வழங்கிய வரலாறும் உண்டு.

இவ்வாறு அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கான நிதியை அமைப்புகளுக்கு பணமாக வழங்குவது என்று சொன்னால் அதனை சிறு பிள்ளைகள் கூட கச்சிதமாக செய்து முடிக்கக்கூடிய வலுவுள்ளவர்களாக காணப்படுகின்றனர்.

இவ்வாறு செய்வதென்று சொன்னால் இதற்கு படித்த மேதாவிகள் வட மாகாண சபைக்கு தேவையில்லை.

ஆகவே, கடந்த கால வரலாறுகளில் வட மாகாண சபைக்கு அதன் அபிவிருத்தி திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் வெளியீடும் அதன் பயன்பாடும் எவ்வாறு இருந்ததென்பதை மக்களும் நன்கு அறிவார்கள் என நம்புகின்றேன்.

அந்தவகையில் தற்பொழுது காணப்படுகின்ற இந்த அசாதாரண அரசியல் சூழ்நிலையை முதலமைச்சர் உடனடியாக முடிவுக்கு கொண்டு வந்து நேர்த்தியான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து செல்ல வேண்டும்.

குறிப்பாக, விவசாய அமைச்சை முதலமைச்சர் தன்னகத்தே வைத்திருக்கின்றார். ஆனால் தற்பொழுது அந்த அமைச்சில் பல வேலைத் திட்டங்கள் தேங்கிக் கிடக்கின்றன என அறிய முடிகின்றது.

ஆகவே, சம்பந்தப்பட்ட அமைச்சர்களை உரிய முறையில் நியமித்து மிக விரைவாக அவ்வேலைத்திட்டங்களை கண்ணும் கருத்துமாக செய்து முடிக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தமட்டில் கடந்த மூன்று வருடங்களில் எனது அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் ஒரு ரூபா நிதி கூட திரும்பிச் செல்லவில்லை என்பதை எமது மக்கள் நன்கு அறிவார்கள்.



குறிப்பாக, இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை அடிமட்டத்திற்கு இறங்கி அதிலிருக்கிற சாதக, பாதக விடயங்களையும் இருக்கின்ற பிரச்சினைகளையும் கண்ணுற்று அவற்றைத் தீர்த்தமையே. அதன் ஊடாகவே முன்னெடுக்கப்பட்ட வேலைத் திட்டங்களை சரியாகவும், விரைவாகவும் பிரயோசனம் உள்ளனவாகவும் செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது.

திட்டங்களை வகுப்பது மட்டுமல்லாது அவற்றை நடை முறைப்படுத்துகின்ற போது அடிமட்டத்திற்கு இறங்கி வேலை செய்வதில் தான் அவற்றின் வெற்றி தங்கி இருக்கின்றது.

தற்பொழுது பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதும் முதலமைச்சர், அவரது வயது, உடல் நிலை காரணமாக அடிமட்டக் கிராமங்களுக்கு இறங்கி செயற்படுவது என்பது முடியாத காரியம்.

ஆகவே, மிக விரைவாக உரிய அமைச்சர்களை நியமித்து மாகாணத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியைச் சரியாக பயன்படுத்துவதன் மூலமே எமது மக்களின் வாழ்வாதாரத்தை ஓரளவுக்கேனும் உயர்த்த முடியும்.

தூரநோக்கோடு சிந்தித்து முதலமைச்சர் செயற்படுவாராயின் அதனை முழுமனதோடு நான் வரவேற்கின்றேன்.

மேலும், தற்பொழுது ஏற்பட்டிருகின்ற அரசியல் அசாதாரண நிலையைப் பயன்படுத்தி பலரும் தங்களது சுயலாப அரசியலை முன்னெடுக்க முனைவதை முதலமைச்சராகிய தாங்களும் நன்கு அறிவீர்களென நம்புகின்றேன்.

ஆகவே, எமது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய வகையிலும், அபிவிருத்திகளை துரித கதியில் கொண்டு செல்வதற்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எனவே, பதவி ஆசை மற்றும் சுயநல அரசியலுக்குள் நாம் விழுந்து விடாது மக்களின் நலனே முக்கியமென செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

அதேநேரம், கடந்த காலங்களில் அதிகாரிகள் உட்பட நாங்கள் அனைவரும் நிதி திரும்பிச் செல்லவில்லை என்று மறுதலித்திருந்த போதும் அது எமது மாகாணத்திற்கு நிதி வந்து திரும்பிச் செல்வதென்று அர்த்தமில்லை.

இந்த வேலைத்திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதியானது அந்த வருடத்திற்குள் பயன்படுத்தப்படாவிடில் அடுத்த வருடம் ஒதுக்கப்படும் நிதியிலிருந்துதான் குறித்த வேலைத்திட்டத்தை நிறைவு செய்ய முடியும்.

அவ்வாறு நிதி கடந்த வருட திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் போது புதிய செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியாத நிலைக்கு தள்ளப்படுகின்றோம்.

எனவே, இந்தக் காலப் பகுதிக்கு ஒதுக்கப்படும் நிதி அக்காலப் பகுதியிலே பயன்படுத்தப்படுமானால் புதிய திட்டங்கள் வருகின்ற காலங்களில் சாத்தியமாக்கப்படும்.

நிதி திரும்பிச் செல்லாது என்ற வீண் விவாதங்களை நிறுத்தி யதார்த்தத்தினை புரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக எமது மாகாணத்திற்கு ஒதுக்கப்படும் நிதி போதாதென்றும் மத்திய அரசு எமக்கு நிதியை ஒதுக்கித் தருவதில்லை என்றும் குற்றம் சுமத்தியுள்ளோம்.

ஆனால், தரப்பட்ட நிதி சரியாக ஒதுக்கப்பட்ட வேலைத் திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா? அதனை முற்றுமுழுதாக பயன்படுத்தி இருக்கின்றோமா? என நாமே நமது மனச்சாட்சியை தொட்டு கேட்க கடமைப்பட்டுள்ளோம்.

கடந்த கால தவறுகள் எவ்வாறு இருப்பினும் எதிர் காலத்தில் எமது மாகாணத்தை முன்னேற்ற பாதையில் கொண்டு செல்வதற்கு முதலமைச்சராகிய நீங்கள் தீர்க்கமான முடிவை விரைவாக எடுக்க வேண்டும்.

மேலும், முதலமைச்சராகிய தங்களைச் சுற்றி ஒரு குள்ளநரிக் கூட்டம் சுயநல அரசியல் லாபத்திற்காக வட்டமிட்டுக் கொண்டிருகின்றது. அவர்களின் சொல்கேட்டு நீங்கள் நடப்பீர்களெனில் இன்னும் எமது மாகாணம் பல பின்னடைவுகளை சந்திக்க நேரிடும்.

அத்தோடு ஒரு விடயத்தை சரியாக சிந்தித்து செயற்படுத்த கூடிய அறிவு, ஆற்றல், வல்லமை உடையவர் தாங்கள். அந்தவகையில் எவரதும் சுயநல அரசியல் லாபத்திக்கும் இடம் கொடுக்காது சரியான விடயங்களை நேர்த்தியாக முன்னெடுப்பீர்களென நம்புகிறேன் - எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்னும் இரண்டு நாள்களில் புதிய வெளிவிவகார அமைச்சர்!

## பதில் வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்



கொழும்பு, ஒக. 14

புதிய வெளிவிவகார அமைச்சர் அடுத்த இரண்டு தினங்களில் நியமிக்கப்படுவார்எனபதில் வெளிவிவகார அமைச்சர் வசந்த சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சின் புதிய செயலாளர் தனது பணிகளைப் பொறுப்பேற்பார் எனவும் கூறியுள்ளார்.

பிம்ஸ்டெக் மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு நாடு திரும்பிய வசந்த சேனாநாயக்கவிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இதனைகூறியுள்ளார்.

புதிய வெளிவிவகார அமைச்சராக திலக் மாரப்பன நியமிக்கப்பட உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திறைசேரி பிணைமுறி விவகாரம் காரணமாக வெளிவிவகார அமைச்சராகப் பதவி வகித்த ரவி கருணா நாயக்க அண்மையில் தனது பதவியை துறந்தார்.

அவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு கூட்டு எதிரணி முயற்சி மேற்கொண்டது. இதனையடுத்தே அவர் தனது பதவியை துறந்தார் என எதிர்க் கட்சிகள் தெரிவித்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டின் அமைவிடம் காரணமாக

# போதைப் பொருள் கடத்தலை ஒழிப்பதில் பல்வேறு சிரமம்

## அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 14

இலங்கையின் அமைவிடம் காரணமாக நாட்டின் ஊடாக நடக்கும் போதைப் பொருள் கடத்தல்களை ஒழிக்கும் நடவடிக்கை சிரமமானதாக மாறியுள்ளது என அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சர்வதேச உதவிகளைப் பெற்று போதைப் பொருள் கடத்தலை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஒழுங்குசெய்த, போதைப் பொருள் எதிர்ப்பு நடைப் பயணத்தில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே பிரேசில் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் சீனி கொள்கலன்களைத் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்த இலங்கை சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் தடுப்புபிரிவினருடன்இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுக்க உள்ளோம் என சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன கூறியுள்ளார். (க)

# அரசியல் காட்டிக் கொடுப்புகளும் குழிபறித்தலும் இங்கு தொடர்கதை

## முன்னாள் அமைச்சர் சத்தியலிங்கம் விசனம்







ஈழத்தமிழரின் அரசியலில் இன்றும் காட்டிக் கொடுப்புகளும், குழிபறித்தல்களும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. இதன் விளைவே வடக்கு மாகாண சபையின் இன்றைய நிலைக்குக் காரணமென வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நேற்று கனகராயன் குளத்தில் நடைபெற்ற தங்கம்மா முதியோர் இல்லத் திறப்பு விழாவில் அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

30 வருடகால கொடிய யுத்தத்தின் பின்னர் பெரும் எதிர்பார்ப்புடன் நிறுவப்பட்ட வடக்கு மாகாண சபையில் அண்மைக்காலமாக நடைபெறும் விடயங்கள் மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளன. ஏற்கனவே மத்தியிலுள்ள நல்லாட்சியில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துவருகின்ற நிலையில், மாகாண சபையில் நடைபெறும் நிகழ்வுகள் கேலிக்கூத்தானவையாக பேசப்படுகின்றன.


மஹிந்த அரசின்மேல் கொண்ட வெறுப்பின் பிரதிபலிப்பாக மைத்திரி தலைமையிலான அரசை நிறுவுவதற்கு தமிழ்மக்கள் பெரும்பங்களிப்பை ஆற்றியிருந்தனர். இதன்மூலம் தமக்கு நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வு கிடைக்குமென எதிர்பார்த்தனர். எனினும், அதுவும் கடந்தகாலங்களில் நடைபெற்றதுபோன்று கானல்நீராக மாறிவிடுமோ என்ற அச்சம் மக்கள் மத்தியில் தோன்ற ஆரம்பித்துள்ளது. நிரந்தர அரசியல் தீர்வுக்கான தெரிவுக்குழுக்களின் அறிக்கைகள் வெளியிடப்பட்டு பலமாதங்கள் ஆகியும், இதுவரை அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாது காலங் கடத்தப்பட்டுவருகின்றமை இந்த அரசிலும் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

இப்படியான சூழ்நிலையில் வடக்கு மாகாணசபையில் அரைகுறையான அதிகாரங்களைக்கொண்டு பல சவால்கள் மத்தியில் மக்களுக்கான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் எங்களையும், வீண்பழி சுமத்தி வேலை செய்ய முடியாமல் தடுக்கின்றனர். அரசியல் போட்டி காரணமாகவும் தங்களுக்கு பதவிகள் கிடைக்கவில்லையென்ற பொறாமையினாலும் உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து எம்மை மக்கள் சேவை செய்யாது தடுத்து வருகின்றனர்.

இந்தமாகாணத்திற்கான அனைத்து அமைச்சுக்களுக்குமான ஐந்துவருடத்திற்கான மொத்த நிதியொதுக்கீட்டை விட, அதிகமாக நிதியைதனியொருஅமைச்சிற்காக மத்திய சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் வெளிநாட்டு நிதி வழங்குநரிடமிருந்து மாகாணத்திற்கு கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொண்டவன் நான். மாகாணத்திலுள்ள ஐந்து அமைச்சுக்களில் மாகாணத்தின் சுகாதார அபிவிருத்திக்காக துறைசார் நிபுணர்களின் ஆலோசனையுடன், ஒரு நீண்டகால அபிவிருத்தித் திட்டத்தை தயாரித்தவன் நான். அதன்பால் அபிவிருத்தி திட்டங்களையும் செய்து வருகிறேன். எனினும்என்மீதுவீண்பழிசுமத்தி அதனைத்தடுப்பதற்கு சிலர் முற்படுகின்றனர். இதற்காகவே காட்டிக்கொடுப்புகளையும், குழி பறிக்கும் வேலைகளையும் அவர்கள் செய்து வருகின்றனர். எனினும், வாக்களித்த எனது மாவட்ட மக்களுக்கும், இந்த மாகாணத்தின் அபிவிருத்திக்காகவும் மாகாண சபை உறுப்பினராக தொடர்ந்தும் பாடுபடுவேன். ஏற்கனவே வவுனியா மாவட்டத்தில் பாரிய சுகாதார அபிவிருத் திட்டங்களை ஆரம்பித்துள்ள நிலையில், இவ்வருடமும் கனகராயன்குளம், சேமமடு, ஈச்சங்குளம் ஆகிய இடங்களில் புதிய கிராமிய வைத்தியசாலைகளை அமைப் பதற்கு நிதியொதுக்கீடுகளை செய்துள்ளேன்.

தமிழ் மக்களின் கலாசாரத்தில் சிறுவர் இல்லம், முதியோர் இல்லம் என்பன வேண்டப்படாதவை.தாங்கள் வணங்கும் கடவுளைவிட தாய் தந்தையரை மேலாக பார்க்கும் சமூகம் எமது சமூகம். அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று அழைக்கின்றோம். எனினும், இந்த நீண்ட கொடிய யுத்தம் எமது மக்களின் உயிர்கள், உடமைகளை மட்டும் அழித்துவிடவில்லை. எங்களின் நீண்ட வரலாற்றைக் கொண்ட பாரம்பரியங்களையும் அழித்துள்ளது. இதன் பக்க விளைவுதான் இவ்வாறான முதியோர் இல்லங்கள் தேவைப்படும் சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளது.

முற்காலத்தில் குழந்தைகளைப் பெற்றோரும் பிற்காலத்தில் பெற்றோர்களை குழந்தைகளும் பராமரிப்பதே பண்பு. ஆனாலும் இவ்வாறான முதியோர் இல்லங்கள் காலத்தின் தேவையாக தற்போது உள்ளன. வயதான காலங்களில் தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்த, காணமால் ஆக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர், நாட்டின் சூழ்நிலை காரணமாக பிள்ளைகளை வெளிநாடுகளுக்கஅனுப்பியபெற்றோர் என பிள்ளைகளின் அரவணைப்பின்றி எத்தனையோ பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இவ்வாறனவர்களுக்கு இதுபோன்ற முதியோர் பராமரிப்பு இல்லங்கள் நிச்சயம் ஆறுதலைக் கொடுக்கும். அந்த வகையில் கனகராயன் குளத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் கலாநிதி முருகர் குணசிங்கம் என்பவர் தனது தாயாரின் நினைவாக இவ்வாறானதொரு இல்லத்தை திறந்துவைத்திருக்கின்றமை காலத்தின் தேவையறிந்து செய்த மாபெரும் சேவை யாகவே பார்கின்றேன். - என்றார்.




# அமைச்சருக்கு எதிராக அவரின் ஆளும் தரப்பே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைப்பதா?

## உலகில் நடக்காத அதிசயம் என கூட்டு எதிரணி கிண்டல்

நல்லாட்சி அரசின் ஆளும் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள அடிதடி சர்வதேச அளவில் கேலிக்குரியதாகிப் போயுள்ளதாக கூட்டு எதிரணி கிண்டல் செய்துள்ளது.

நீதியமைச்சர்விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணைகுறித்துகருத்துவெளியிடும்போதே கூட்டு எதிரணியின் முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் சொய்சா இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

நீதியமைச்சர்விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக அவர் சார்ந்த ஆளுங் கூட்டமைப்பே நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரவுள்ளது.

உலகில்எங்குமேஓர் அரசாங்கத்தின் அமைச்சருக்கு எதிராக அதே ஆளுந்தரப்பில் இருந்துநம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவதில்லை.

நீதியமைச்சர்விஜேதாஸ ராஜபக்ஷ தனது அமைச்சுப் பதவியில் சிறப்பாகவும், நேர்மையாகவும் செயற்பட்டதற்கான பரிசே இந்த நம்பிக்கை இல்லாப் பிரேரணையாகும்.

இதற்கு எதிராகக் கூட்டு எதிர்க்கட்சி, விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கும்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 52 பேரும் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு ஆதரவாக வாக்களிப்போம். - என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்சா தெரிவித்துள்ளார். (உ)

# நீர்கொழும்பு சூடு: நால்வர் கைது

நீர்கொழும்பு - குரண சந்தியில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கும் இனந்தெரியாத குழுவொன்றுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பில் நான்கு பேர் சந்தேகத்தின்பேரில்கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கடற்படையிலிருந்து இடைவிலகியவர் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்தச்சம்பவத்தில், காயமடைந்த இரு சந்தேகநபர்கள் நீர்கொழும்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் இருவரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம்

அரச நிர்வாக சேவையாளர்களின் சம்பளம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாகக் கூறிய அரசாங்கம் மௌனம் சாதித்து வருகின்றது. எனவே அரச நிர்வாக அமைச்சின் முன்பாக நாளைபாரிய ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுப்போம். தீர்வு கிட்டாவிடின் தொடர்சியாக வேலை நிறுத்தத்தை அறிவிப்போம். - என அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தின் செயலளார் சந்தன சூரியராய்ச்சி தெரிவித்தார்.

கொழும்பு - மருதானை சன சமூக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேய அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.




தேவை

✫ பக்க வடிவமைப்பாளர் (Page Maker)
(InDesign, Photoshop தெரிந்தவர்கள்)
★ தட்டச்சாளர் (Typesetter)

அனுபவம் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ்கண்ட முகவரிக்கு தபால் மூலம் அல்லது Email மூலம் அனுப்பி வைக்கவும்.

காலைக்கதிர்
30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
தெ.பே: 021 222 3000
Email: kalaikkathirnews@gmail.com



தேவை
அசிஸ்டன் பியூட்டீசன்
Assistant Beautician
அனுபவம் மிக்கவர்கள் விரும்பத்தக்கது.
ஸ்ரீ கோஷி பியூட்டி பலஸ்
320C, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
Tel : 077 170 3230
Sree Koshi Beauty Palace
320c, Point pedro Road, Aanai panthi, Jaffna.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.